

# ஞானச்சுடர்



சந்நிதியான் ஆச்சிரமம்

தை 2025

325ஆவது மலர்

ஓம் முருகா



வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறள் வழி



**கல்லா ஒருவன் தகைமை தலைப்பெய்து**
**சொல்லாடச் சோர்வு படும்.**

**பொருள் :** கல்லாத ஒருவனுடைய மதிப்பு கற்றவன் அவனைக் கண்டு உரையாட அழிந்து போகும். (405)


**உளரென்னும் மாத்திரைய ரல்லாற் பயவாக்**
**களரனையர் கல்லா தவர்.**

**பொருள் :** படிக்காதவர் உலகத்தில் இருக்கிறார் என்று சொல்லும்படி மாத்திரம் இருக்கின்றார்கள். அவர் பிறர்க்கும் தமக்கும் பயன் படாமையால் விளையாத உவர் நிலத்தை ஒப்பர். (406)

---

# நற்சிந்தனை

*மறப்பேனோ குருநாதன் தன்னை*



**திங்கட்சடையாய் எங்களையுடையாய் சிவனே ஓம்**

திங்கட் சடையாய் எங்களை யுடையாய் சிவனே ஓம்
சீரிய அடியார் சிந்தையி லுறையுஞ் செல்வா ஓம்
மங்கையை யுடையாய் மழவிடை யானே மாதவனே ஓம்
மண்ணும் விண்ணும் ஒன்றாய் விளங்கும் மணியே ஓம்
அங்கையி லங்கி தங்கிய பரனே யரனே ஓம்
ஆருயி ரெல்லாம் நீயே யாகி யமர்ந்தாய் ஓம்
கங்குலும் பகலும் இல்லாக் காட்சி தருவாய் ஓம்
கருதும் நல்ல வடியரை யென்றுங் காப்பாய் ஓம் 01

சிறையார் வண்டறை கொன்றைப் போதனே சிவனே ஓம்
சீவன் சிவனாய்ப் பாவனை செய்வார் திருவே ஓம்
குறையா வன்பு தரவே வருவாய் குருவே ஓம்
கூடிக்கூடி யுன்னடி பாடல் கொடுப்பாய் ஓம்
பிறையார் சடையாய் பேரா யிரமே யுடையாய் ஓம்
பேசப் பேச வின்பம் பெருகும் பிரானே ஓம்
அறையார் கழலே யல்லாற் சிறியே னறியேன் ஓம்
அன்புசெய் யடியரை யென்றும் ஆளக் கடவாய் ஓம் 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# ஞானச்சுடர்

வெளியீடு - 3 சுடர் - 325



2025 தை

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| முடியும் என்றால் முடியும் | சி. நற்குணலிங்கம் | 01 - 02 |
| வாழ வைப்போரை... | இ. தயாபரன் | 03 - 04 |
| பகவத்கீதையின் தத்துவம் | பூ. சோதிநாதன் | 05 - 07 |
| விதியை மதியால்... | கு. சிவபாலராஜா | 08 - 10 |
| திருக்கயிலாயம் | வி. செல்வரெத்தினம் | 11 - 13 |
| வழித்துணை | ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் | 14 - 15 |
| கண் திறக்கும் கல்வி | திருமதி ஜெ. இராஜேஸ்வரி | 16 - 17 |
| தில்லைக் கூத்தனின்... | திருமதி பா. சிவனேஸ்வரி | 18 - 21 |
| சாதனைத் தமிழன் விருது | க. கைலைநாதன் | 22 - 24 |
| நித்திய அன்னப்பணி | சந்நிதியான் ஆச்சிரமம் | 25 - 28 |
| சமுதாயப் பணிகள் | தொகுப்பு | 29 - 36 |
| படங்கள் தரும் பதிவுகள் | சந்நிதியான் ஆச்சிரமம் | 37 - 46 |
| திருப்புகழைக் கற்றார்... | துரை. கணேசமூர்த்தி | 47 - 49 |
| சரித்திரம் போற்றும்... | காரை எம்.பி. அருளானந்தன் | - 50 |
| வாசகர் போட்டி | சந்நிதியான் ஆச்சிரமம் | 51 - 52 |


வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)
சந்நிதியான் ஆச்சிரம
சைவ கலை பண்பாட்டுப் பேரவை
தொலைபேசி இல: 021 321 9599, 021 226 3406
அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

Printed & Published By:
Sannithiyan Achchirama Saiva Kalai Panpaddu Peravai.
Selvasannithi, Thondaimanaru.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

குருபாதம்

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

*ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்*

*இரண்டாவது குருமகா சந்நிதானம் அவர்கள்*

*வழங்கிய*

# ஆசிச்செய்தி



1998ஆம் ஆண்டு முதல் இன்று வரை மாதாந்தமாக வெளிவந்து கொண்டிருக்கும் ஞானச்சுடரின் 325ஆவது மலருக்கு யான் இந்த ஆசிச்செய்தியை வழங்குவதில் பெரு மகிழ்வடைகின்றேன்.

இம் மலரானது நாட்டில் இடம்பெற்ற பலவிதமான இடர்பாடுகளையும் கடந்து உயரிய சமய கருத்துக்களைக் கொண்ட தூய சஞ்சிகையாகவும், சமூகத்திற்கு ஆன்மீக ரீதியாக பல உயரிய கருத்துக்களையும் சுமந்து வெளிவருவது சந்நிதி வேலவனின் திருவருள் என்றே கூறவேண்டும்.

இம் மலர் மாதாந்தம் தொடர்ந்து பிரகாசித்து சமயப் பணியாற்றிட அனைவரும் உறுதுணையாக நிற்கவேண்டும்.

"வாழ்க ஞானச்சுடர்"

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

*ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஞானச்சுடர்



வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர் மார்கழி மாத வெளியீடு

## வெளியீட்டுரை:

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் வெளியீடு செய்யப்பட்டுவரும் மார்கழி மாத ஞானச்சுடர் மலரின் வெளியீட்டுரையினை இளைப்பாறிய கிராம சேவையாளரும், ஆச்சிரமப் பணிகளுக்கு தன்னாலான பங்களிப்பினை வழங்கி வருபவருமான திரு சோ. பரமநாதன் அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தம் ஆரம்ப உரையில் ஆச்சிரம முதல்வரின் மேற்பார்வை, நிர்வாகத் திறமையே இந்தளவுக்கு ஆச்சிரமத்தின் வளர்ச்சிக்கும் பெருவாரியான சமூக சேவை களுக்கும் காரணமாகின்றது. இது முருகனின் அருட்கடாட்சமே ஆகும். மேலும் இம் மலர் வெளியீட்டின்மூலம் ஆன்மீகம் சார்ந்த பல எழுத்தாளர்களை உருவாக்கியதோடு வெளியிடப்பட்டுவரும் ஞானச்சுடர் மலர்களில் அவர்களது ஆக்கங்களை உள்வாங்கி எழுத்தாற்றலை வளர்ப்பதும் ஒரு பாராட்டப்பட வேண்டிய விடயமாகவே அமைகின்றது.

இந்தவகையில் வருடா வருடம் மார்கழி மாதம் வெளிவந்துகொண்டிருக்கும் ஞானச்சுடர் மலருக்குரிய வெளியீட்டுரையினை வழங்குவதையிட்டு மிகவும் பெருமைப் படுகின்றேன். இதற்கு எல்லாம் காரணம் சந்நிதி வேலவனே என்று கூறித் தனது வெளியீட்டுரையினை இனிதே நிறைவு செய்தார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மதிப்பீட்டுரை:

324ஆவது மாத காலமாக வெளிவந்துகொண்டிருக்கும் மலருக்குரிய மதிப்பீட்டு உரையை வழமைபோன்று இவ் வருடமும் இளைப்பாறிய பிரதிக் கல்விப் பணிப்பாளரும் நன் மாணாக்கர்களை உருவாக்கும் பரம்பரையில் வந்தவருமாகிய திரு ஆறுமுகம் ஸ்ரீஸ்கந்தமூர்த்தி அவர்கள் மதிப்பீட்டுரையை வழங்கினார்கள்.

அவர் தம் உரையில் வடமாகாணத்தில் தற்போது சனத்தொகை குறைவடைந்து செல்வதால் பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களின் எண்ணிக்கை குறைவடைந்து செல்கின்றது என்றும் தற்காலத்தில் பிள்ளைகள் தவறுவிடுவதற்குப் பெற்றோர்களும் ஆசிரியர்களுமே முழுக் காரணம். ஒருபோதும் பிள்ளைகளைக் குறைசொல்ல முடியாது. தாய் தந்தையர் தம் பிள்ளைகளுக்கு நற்பண்புகளை ஊட்டி வளர்த்தால் சமுதாயத்தில் பெயர் சொல்லும் பிள்ளைகளாகத் திகழ்வார்கள் என்றார். எனவும் சமுதாயத்தில் பிள்ளைகள் உயர்நிலையில் வாழ்வதற்கு பெற்றோர்கள் தங்களை அர்ப்பணிக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டார். அவ்வகையில் இளம் பிள்ளைகளின் குற்றங்களைப் பெரிது படுத்தாது அன்போடு அரவணைத்துச் சென்றால் நல்ல சமுதாயத்தை உருவாக்க முடியும் என்றும் கூறினார்.

மேலும் மாதா மாதம் வெளிவந்துகொண்டிருக்கும் ஞானச்சுடர் மலரின் வளர்ச்சி கண்டு பெருமிதம் அடைகின்றேன். இம் மலரில் வெளிவரும் ஆக்கங்களின் ஊடாக பல புதிய கருத்துக்களை அறிவதோடு கட்டுரைகளின் தரமும் மேலோங்கி வருவதையும் காணக்கூடியதாக இருக்கின்றது என்று கூறி மலரில் இடம்பெற்ற கட்டுரைகளின் தரத்தைப்பற்றி சபையில் உள்ள அடியார்களுக்கு விளக்கிக்கூறி தனது மதிப்பீட்டுரையை இனிதே நிறைவு செய்தார்.





தொடர்ந்து ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்படும் சமுதாயப் பணிகளின் வரிசையில் வறுமைக்கோட்டின்கீழ் கல்வி கற்கும் மூன்று பாடசாலை மாணவர்களுக்குத் துவிச்சக்கர வண்டி வழங்கலோடு அன்றைய நிகழ்வு முற்றுப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மக்கள் வங்கி யாழ். ஸ்ரான்லிவீதி உத்தியோகத்தர்கள்**

திரு இ. ஜெயகாந்தன்
திரு க. விஜயகுமார்
திரு சி. ஜெரோன்
திரு பே. ராஜ்குமார்
திருமதி உ. தனுசுயா
செல்வி யோ. சுபாஜினி
திருமதி உ. கலைவாணி
செல்வி மு. தர்சனா
திரு ப. ஆரணன்
திரு த. லங்கரன்
திரு R. சுகிர்தன்
திருமதி ஜெ. சயந்தினி
திருமதி பா. சிந்துஜா
திருமதி உ. குகன்யா

**மக்கள் வங்கி யாழ். பிரதான வீதி உத்தியோகத்தர்கள்**

திரு க. ரமேஸ்நேசன்
திருமதி R. பத்மகலா
திரு ந. பாலமுருகன்
திருமதி செ. உஷாந்திகா
திரு த. ரஜிந்தன்
திருமதி R. சரண்யா
திருமதி சு. நிலோசனா
திருமதி ப. யசிக்கா
திருமதி க. புவனகுமாரி
திருமதி பி. சிவதனுசியா
திருமதி I. அனோஜா
திருமதி S. சுமித்திரா
செல்வி ச. சுகிர்தகுமாரி
செல்வி வி. விமர்சனா
திரு A. அகிலதாசன்
N. டினோசா

**மக்கள் வங்கி யாழ். பல்கலைக்கழக உத்தியோகத்தர்கள்**

திருமதி த. அனுஜா
திரு தெ. ஹர்சன்
திரு A. சஜீவன்
திருமதி S. வித்தியா
திருமதி தி. நித்தியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மக்கள் வங்கி யாழ். கன்னாதிட்டி உத்தியோகத்தர்கள்**

திரு P. பார்த்தீபன்
திருமதி கி. மனஸ்வினி
திருமதி சி. தமயந்தி
திருமதி கா. மீரா
திருமதி V. லிதியாமிஷானி
திருமதி S. விஜிதா
திரு ப. உதயணன்
திரு P. புவிராஜ்
திருமதி ம. அனுஷா
செல்வி தி. யனோஜா
திரு P. கிருஷ்ணகுமார்

**மக்கள் வங்கி சுன்னாகம் உத்தியோகத்தர்கள்**

திருமதி P. சிந்துளா
திருமதி சு. பிரசாந்தினி
திரு கோ. அஜந்தன்
திருமதி ச. சசீரா
திரு க. நிஷாந்தன்
திருமதி து. சுபாஜினி
திருமதி பி. நீரஜா
திரு ச. ரூபகாந்தன்
திரு ச. கிரீடன்
திருமதி அ. சுகன்யா

**மக்கள் வங்கி சங்கானை உத்தியோகத்தர்கள்**

திரு ந. தனேஷ்
திரு ந. கோணேஸ்வரன்
திருமதி ச. கோபிகீதா
திரு கி. பிரதீபன்
திரு செ. உமாசங்கர்
திருமதி பி. சிவசொரூபி
திருமதி அ. ஜிரானு
திருமதி தி. புஷாலினி
திருமதி தி. சசிதேவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு ஞா. யுகதாஸ்
திருமதி ப. சுதர்சினி
திருமதி பி. ஜிந்துஜா
திருமதி பு. சாருலதா

**மக்கள் வங்கி தெல்லிப்பழை உத்தியோகத்தர்கள்**

திருமதி P. கிருபாலினி
திரு க. கமலக்ஷன்
திருமதி S. உஷாநந்தினி
திருமதி K. யாழினி
செல்வி மு. ஹேமப்பிரியா
திரு வி. கஜதீபன்
திரு T. தனரஞ்சன்
திருமதி K. செல்வமலர்

**மக்கள் வங்கி சாவகச்சேரி உத்தியோகத்தர்கள்**

திரு கு. வெங்கடேஸ்
திரு ம. லம்போதரன்
திரு G. ஜெயகணேசன்
திரு சி. சஜீவன்
திருமதி R. சுமணா
திருமதி சி. பானுஜா
திருமதி இ. தட்சிகா
திருமதி S. ஆசாயினி
திரு R. ரஜீவன்
திரு க. ஸ்ரீதரன்
திருமதி ல. நிஷங்கா

**மக்கள் வங்கி கொடிகாமம் உத்தியோகத்தர்கள்**

திருமதி வி. பிரியகாந்தினி
திருமதி சே. கிருஷிகா
திரு ஆ. பரணன்
திருமதி ற. சோபிதா
திருமதி சு. பவித்திரா
திரு க. கஜீபன்
திரு த. அங்குசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மக்கள் வங்கி அச்சுவேலி உத்தியோகத்தர்கள்**

திரு S. சர்வானந்தன்
திருமதி ஜெ. பகீரதி
திருமதி ச. கிரிஜினி
திரு தே. ரஜீவன்
திருமதி C.N. கீர்த்திகா
திரு சீ. சற்சொருபன்
திரு தா. தவராஜா

**மக்கள் வங்கி பருத்தித்துறை உத்தியோகத்தர்கள்**

திருமதி P. ரம்யா
திருமதி க. சசிதா
திருமதி V. மனோஜா
திரு S. சிவகுமார்
திரு அ. பிரகலாதன்
திருமதி அ. சிந்துஜா
திரு ச. நிலோஜன்
திரு V. பிரகாஸ்
திரு தெ. முகுந்தன்

**மக்கள் வங்கி வல்வெட்டித்துறை உத்தியோகத்தர்கள்**

திருமதி கே. உதயசாந்தி
திருமதி சு. மாதங்கி
திருமதி தி. வாகினி
திருமதி ப. யாழினி
திருமதி ஜெ. நிமாலினி
திரு K. குலசீலன்
திரு சி. மோகனச்செல்வன்

**மக்கள் வங்கி ஊர்காவற்றுறை உத்தியோகத்தர்**

திருமதி க. சசிகலா
திரு சோ. சுரேஸ்குமார்
திருமதி த. லோஜினி
திருமதி சு. மலர்மதி
திரு ச. சுஜென்
திரு த. ஜெயபிரதாப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மக்கள் வங்கி முல்லைத்தீவு உத்தியோகத்தர்**

திருமதி ம. அகிலா

**மக்கள் வங்கி கிளிநொச்சி உத்தியோகத்தர்கள்**

திரு ந. கோபி

திருமதி ந. கிருஷாந்தி

**மக்கள் வங்கி மாங்குளம் உத்தியோகத்தர்**

திரு த. லிங்கராஜ்

**மக்கள் வங்கி திருமலை மாவட்ட உத்தியோகத்தர்**

திரு அ. ஐங்கரன்

திரு க. மதிவதனன்

திரு ம. பிறேம்குமார்

திருமதி கு. வைஜெயந்தி

திருமதி த. கலைச்செல்வி

திருமதி M. கிருஷ்னானந்தி

திருமதி பீ. கஸ்தூரி

செல்வி வ. கனகசபை

**மக்கள் வங்கி வவுனியா கிளை உத்தியோகத்தர்**

திரு க. லதீகரன்

**திரு த. கணேசமூர்த்தி**

(இளை. நிறைவேற்று அதிகாரி, இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்)

**திருமதி கலைச்செல்வி தயாளன்**

(திருகோணமலை)

**திரு S. திருநாவுக்கரசு**

(அச்செழு, நீர்வேலி)

**திரு பொ. பாலசிங்கம்**

(இளை. காசாளர், இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்)

**செல்வி ஹரினி ஹரிதரன்**

(நுணாவில் மேற்கு, சாவகச்சேரி)

**செல்வி ஹம்ஷாலினி ஹரிதரன்**

(நுணாவில் மேற்கு, சாவகச்சேரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திரு பா. இராசேந்திரம்**

(இளை. கி. சேவகர், உடுப்பிட்டி)

**திரு செ. மதியாபரணம்**

(வளர்மதி புடவை அகம், கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்)

**திரு நீ. சுப்பிரமணியன்**

(இளை. உத்தியோகத்தர், ப.நோ.கூ.ச, உடுப்பிட்டி)

**செல்வி தட்சாயிணி செல்வமாணிக்கம்**

(நாவலடி, உடுப்பிட்டி)

**திரு சி. சர்வானந்**

(சண்டிலிப்பாய்)

**திரு சி. கணேசலிங்கம்**

(தமிழ்ப்பூங்கா, நெல்லியடி)

**உரிமையாளர்**

(பெசன் ஹவுஸ், யாழ்ப்பாணம்)

**உரிமையாளர்**

(பெற்றா ஏசென்ஸ் விநியோகத்தர், யாழ்ப்பாணம்)

**செல்வன் செ. ஷஷ்டிகன்**

(மானிப்பாய்)

**திரு தட்சணாமூர்த்தி பவனேசன்**

(நீர்வேலி)

**உரிமையாளர்**

(சாரங்கா நகைமாடம், யாழ்ப்பாணம்)

**திரு வல்லிபுரம் சிவகுமாரன்**

(சங்கானை)

**உரிமையாளர்**

(வெங்கடேஸ்வரா, யாழ்ப்பாணம்)

**திரு இ. இராசநாயகம்**

(துர்க்கா மரக்காலை, சண்டிலிப்பாய்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திரு ஆ. சுந்தரலிங்கம்**

(இளை. பிரதம அஞ்சல் அதிபர்)

**திரு நா. கந்தப்பு**

(தோப்பு, அச்சுவேலி)

**திரு க. தர்மலிங்கம் J.P.**

(நீர்வேலி)

**உரிமையாளர்**

(மலாயன் கபே, யாழ்ப்பாணம்)

**திரு ஜெ. இராஜகோபால்**

(கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்)

**திரு சேனாதிராசா சற்குணராசா**

(பண்டத்தரிப்பு)

**திருமதி பாலகிருஸ்ணன் சிவனேஸ்வரி**

(முருகமூர்த்தி வீதி, சங்கானை)

**திரு க. இராஜதுரை**

(நீர்வேலி)

**திரு த. சிவசுப்பிரமணியம்**

(லீலா வெதுப்பகம், சங்கானை)

**செல்வி ஆகித்தியா சயந்தன்**

(யாழ்ப்பாணம்)

**செல்வன் ப. ஆரணன்**

(கொக்குவில்)

**செல்வி கு. சோதிநாயகி**

(யாழ்ப்பாணம்)

**திரு மு. சரவணபவான்**

(கலைமகள் விலாஸ், சங்கானை)

**செல்வி நா. ஜெயராணி**

(இளை. அதிபர், சங்கானை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திரு இ. கோபாலசுந்தரம்**

(சதா வெதுப்பகம், உரும்பராய்)

**திரு J. பிரபாகரன் மாஸ்ரர்**

(நெல்லியடி)

**திரு இ. சொக்கலிங்கம்**

(இளைப்பாறிய ஆசிரியர், நாவற்குழி, கைதடி)

**திரு கு. கங்கைவேணியன்**

(உரிமையாளர், வேணி களஞ்சியம், யாழ்ப்பாணம்)

**திரு ந. சத்தியரூபன்**

(சிறி நதியா நகைமாடம், யாழ்ப்பாணம்)

**திரு க. சோமசேகரம்**

(மகாராணி புடவையகம், யாழ்ப்பாணம்)

**திரு ஐ. சிவகுமார்**

(சுதுமலை கிழக்கு, மானிப்பாய்)

**திருமதி வ. தபேந்திரன்**

(உப அஞ்சல் அதிபர், குப்பிளான்)

**திரு க. இராசநாயகம்**

(பிள்ளையார் ஸ்ரோர்ஸ், தொட்டிலடி, சங்கானை)

**திரு R.S. தனபாலன்**

(பாலன் மில், வட்டுக்கோட்டை)

**திரு சி. சச்சிதானந்தம்**

(சச்சியா இரும்பகம், வட்டுக்கோட்டை)

**உரிமையாளர்**

(V.M.K. நகைமாளிகை, யாழ்ப்பாணம்)

**திரு வே. பொன்னம்பலம்**

(பாக்கியரெத்தினம் இரும்பு விற்பனை நிலையம், சங்கானை)

**திரு க. நாகராசா**

(காங்கேசந்துறை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் தரும் தகவல்

"ஞானச்சுடர்" தனது 27ஆவது வயதைப் பூர்த்தி செய்து 28ஆவது வயதினில் காலடி வைப்பதையிட்டு நாம் பெருமைப்படுகின்றோம்.

விளம்பரங்கள் எதுவுமின்றி, அரசியல் கலப்பின்றி, வியாபார நோக்கமின்றி சராசரி 60 பக்கங்களுடன் சந்தாதாரர் கைகளில் இம் மலர் மாதாந்தம் பிரகாசிப்பது சந்நிதி வேலவனது அருள் என்றே கூறவேண்டும்.

ஆரம்ப காலங்களில் கட்டுரை, கவிதைகளிற்காக வீடுகளிற்குச் சென்று காத்திருந்த காலம்போல் அல்லாமல் இன்று தபால் ஊடாகவும், நேரிலும் வந்து சேரும் கட்டுரைகள், கவிதைகள் ஏராளம். இவற்றினைச் சரி பார்த்து தரம் பிரித்து அச்சுப்பதிப்பிற்கு அனுப்புவதென்பதே பெரும் விடயமாகவுள்ளது.

ஒரே கட்டுரையாளர்களின் கட்டுரைகள் அவற்றின் தரம் கருதி அடிக்கடி வெளி வந்தாலும் அறிமுக எழுத்தாளர்களையும் அவர்களின் ஆற்றல்களையும் வெளிக் கொணர் வதில் முன்னிற்பதில் நாம் பின்னிற்பதில்லை. இந்த நோக்கில் நாம் கடந்த ஆண்டில் புதிய எழுத்தாளர்களையும், கவிதை வடிப்போரையும் அறிமுகப்படுத்தியிருக்கின்றோம். இதை யிட்டு நாம் திருப்தியடைகின்றோம்.

மாதம் மாதம் 2100 மலர்கள் வெளிவருவதற்கு உறுதுணையாகவிருக்கும் சந்தாதாரர்களுக்கும், வாசகர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். ஆச்சிரமம் ஆற்றும் சகல பணிகளுக்கும் உறுதுணையாக இருந்து எம்மையெல்லாம் வழிநடத்திச் செல்லும் சந்நிதி வேற்பெருமானுக்கு நன்றி கூறுவதோடு ஆக்கங்களை வழங்கிவரும் அன்பர்களுக்கும் சிறப்புப்பிரதி பெறுவோர்களுக்கும் மாதந்தோறும் வெளியீட்டுரை, மதிப்பீட்டுரைகளில் பங்குபற்றுவோர்க்கும் நன்றியைக் கூறி நிறைவு செய்வதுடன் தொடர்ந்தும் மலர் பிரகாசிக்க மலரோடு சம்பந்தப்பட்ட நல்லுள்ளங்கள் அனைவரையும் வேண்டுகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தைமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

## மக்கள் வங்கி இளைப்பாறிய உத்தியோகத்தர்கள்

திரு சி. பத்மநாதன்
திரு வ. சண்முகநாதமுதலி
திரு க. சுசீந்திரன்
திரு சி. நித்தியானந்தன்
திரு ந. நாகேஸ்வரன்
திரு இ. யோகராசா
திரு தி. சிவகுமாரன்
திரு க. சண்முகலிங்கம்
திரு இ. சிவஞானசுந்தரம்பிள்ளை
திரு க. ஞானசீலன்
திரு த. சிவகுமார்
திரு பொ. தங்கராசா
திரு எஸ். இராஜேந்திரம்
திரு க. ஞானச்சந்திரன்
திரு க. ஸ்ரீதரன்
திரு கி. அமிர்தலிங்கம்
திரு து. பாலேந்திரா
திருமதி சு. விஜயகுமார்
திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம்
திரு K. சிவப்பிரகாசம்
செல்வி விமலா கந்தையா
திரு த. தவேந்திரராஜா
திரு க.து. ஜெகநாதன்
திரு சி. மனோராஜ்
திரு செ. பாலசுந்தரம்
திரு சி. ஸ்ரீரங்கநாதன்
திருமதி ப. சுஜித்திரா
திருமதி ஜெ. பத்மநாபன்
திரு செ. கந்தசாமி
திரு R. சந்திரகோபன்
திரு பி. கிருஸ்னானந்தன்
திரு R. ஸ்ரீஸ்கந்தராஜா
திரு த. பாலசிங்கம்
திரு N. குமாரசிவம்
திருமதி சி. கீர்த்திகா
திரு R. சிவசுப்பிரமணியம்
திருமதி சுகந்தி தயாபரன்

## மக்கள் வங்கி யாழ். பிரதேச காரியாலய உத்தியோகத்தர்கள்

திரு P. தேவநேசன்
திரு W. சிவபாலன்
திரு க. கலீபன்
திரு ச. கங்காதரன்
திரு வி. கிஷோர்
திருமதி T. பிரதீபா
திருமதி பி. மயூரி
திருமதி ஆ. மாதுஷா
திருமதி சு. யாழினி
திருமதி சு. வனஜா
திருமதி த. தேனுதயா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான பிரதம குருவின் 28ஆவது அகவை ஆசிச் செய்தி



சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் மாதாந்தம் வெளியிடப்பட்டுவரும் ஞானச்சுடர் மலர் 28ஆவது ஆண்டில் தடம்பதித்து 325ஆவது மலராக வெளிவருவதையிட்டும், இதற்கான ஆசிச்செய்தியை வழங்குவதிலும் பேருவகை அடைகின்றேன்.

தொடர்ந்தும் இம் மலர் வெளிவர எனது வாழ்த்துக்களையும் நல் ஆசிகளையும் தெரிவித்து அமைகின்றேன்.

"இன்பமே சூழ்க; எல்லோரும் வாழ்க"

"வாழ்க வளமுடன்"

"சுப மங்களம்"

"அன்பே சிவம்"

சந்நிதியான் ஆச்சிரம
சைவ கலை பண்பாட்டுப் பேரவை போஷகருமாகிய
*சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர்* J.P
பிரதமகுரு:
வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில் ஆதீனகர்த்தா
தென்புலோலி புற்றளைச் சித்தி விநாயகர் தேவஸ்தானம்
சைவக்குருமார் சபை பீடாதிபதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் அவர்கள் வழங்கிய பிரார்த்தனை உரை

உலகுய்ய வந்த முருகப்பெருமானின் அருளாட்சி சந்நிதிப் பதியிலே சிறப்புற்றிருக்கின்றது. அவனது திருவருளால் சந்நிதியான் ஆச்சிரமப் பணிகளும் விழுதெறிந்து வியாபகமுற்றுள்ளன.



எனது இயல்துறை சார் பயணத்தின் தொடக்கம் 1998ஆம் ஆண்டு சந்நிதியான் ஆச்சிரமத்தில்தான் நேர்ந்தது. இன்று என்னைப்போல் பலர் ஆச்சிரமத்தால் அடையாளப் படுத்தப்பட்டு வளர்த்து விடப்பட்டுள்ளனர்.

தற்போது ஆச்சிரமம் தன் பணிகளை சந்நிதிக்கு வெளியில் - வடபுலத்திற்கு வெளியில் தாராளமாக மேற் கொள்கின்றது. இவற்றில் சில பணிகளை நான் நேரில் கண்டு அனுபவித்திருக்கின்றேன். வடக்கு, கிழக்கு, மலையகம் என்ற பேதமின்றி மனித சேவையே தெய்வ வழிபாடு என ஆச்சிரமத்தின் சேவை அமைந்திருக்கின்றது.

ஆன்மீகத் தளத்தில் பல்வேறு அறப்பணிகளை ஆற்றும் சந்நிதியான் ஆச்சிரமத்தின் உயர்ச்சி அடுத்த கட்டம் நோக்கி வளரவேண்டும் என்பது என் விருப்பம். அது சந்நிதியான் ஆச்சிரம அறக்கட்டளையாக உயர்ச்சி பெறுவது பல்வேறு பணிகளை இலகுவாக மேற்கொள்ள வாய்ப்பளிக்கும்.

சந்நிதிச் சூழல் முதியோரைத் தாங்கும் பெருநிலம். அது அவர்களுக்கு ஆன்மீக ஆறுதல் தரும் பக்திப் பரப்பு. இங்கு (கட்டணம் செலுத்தும்) விடுதி மற்றும் முதியோர் தங்ககம் ஆச்சிரமத்தால் ஏற்படுத்தப்படுவது பலருக்கு நன்மை பயக்கும். இன்று யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல ஆலயங்களின் சூழலில் சாதாரண மக்கள் தங்களுக்கு கட்டுபடியான விலையில் தங்கி ஆன்மீக யாத்திரை மேற்கொள்ளக்கூடிய ஓர் இடம் இல்லாத குறை நிலவுகின்றது. இந்தக் குறை சந்நிதியான் ஆச்சிரமத்தின் ஊடாக எங்கள் மண்ணில் களையப்படின் இந்த மண்ணில் வாழ்வோரும் இந்த மண்ணை நாடுவோரும் நன்மையடைவர்.

எது எவ்வாறாயினும் முருகப்பெருமானின் சித்தம் எதுவோ அதுவே காலத்தினால் தீர்மானிக்கப்பட்டு நிறைவேறும் என்பதும் அனைவரும் அறிந்ததே.

ஆச்சிரம சுவாமிகளும் அடியார்களும் இறையருளால் இனிதே வாழவும் ஞானச்சுடர் தொடர்ந்து தன் மணம் பரப்பவும் எனது பிரார்த்தனைகளைச் சமர்ப்பிக்கின்றேன்.

*-ச. லலீசன்-*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடியும் என்றால் முடியும்

– திரு சி. நற்குணலிங்கம் அவர்கள் –

ஒரு செயலைச் செய்வதற்கு முடியும் என்ற மனமே பிரதான ஊன்றுகோலாகும். இது பெரும்பாலானவர்களிடம் இல்லை. கடுமையான செயலாயின் அதைச் செய்ய முன்னரே முடியாது என்ற முடிவுக்கு வந்துவிடுவார்கள் பலர். இதனால்தான் அதிகமானவர்களின் பல செயல்கள் தோல்வியில் முடிந்துள்ளன. எனவே ஒரு செயலின் வெற்றி முடியும் என்ற மனோநிலையில்தான் தங்கியுள்ளது. எதுவாயினும் முடியுமென்றால் முடியும் ஆனால் முடியாதென்பதற்கு முடிவுகட்டுபவர்கள்தான் அதிகம். எண்ணம், சொல், செயல் மூன்றும் முடியும் என்ற ஒரே நேர்கோட்டில் இருப்பின் வெற்றி நிச்சயம். என்னால் முடியும் என நினைப்பவன் யார் முன்னும் மண்டியிடுவதில்லை. முடியாது என நினைப்பவர்கள் அதிகம் மண்டியிட நேர்கிறது. என்னால் முடியும் என்பதை மூச்சாக்கி வாழ்பவனுக்கு எதிலும், என்றும் உண்டு மகிழ்ச்சி. முடியாது என்று சொல்வது மூடநம்பிக்கை. முடியுமா என்று கேட்பது அவநம்பிக்கை. முடியும் என்று சொல்வது தன்னம்பிக்கை. முடியும் என்பது பல நோய்களைத் தீர்க்கும் மருந்து.

செயல் என்ற காரியமே தலை சிறந்தது. உன்னதமான ஆயுதமாக உத்வேகம் தருவது. இலட்சியப் பயணங்களை கட்டமைத்து உன்னதமான அடைவுகளைத் தரவல்லது. முடியுமென்ற உணர் முயற்சியாகி இலக்கை அடையும்வரையான காலத்தை முடிவின்றி ஞாபகம் கொள்ளச்செய்வது. அந்தவகையிலே ஒரு செயலைச் செய்ய எண்ணியவர் அதைச் செய்து முடிப்பதற்கு முடியுமென்ற மன உறுதியை உடையவராக இருக்க வேண்டும். ஒரு செயலைச் செய்வதற்கு முன்பாகவே அதைச் செய்து முடிப்பது கடினம் என்ற முடிவுக்கு வந்துவிடக்கூடாது. செயலின் தொடக்கத்திலேயே முடியாது என்ற முற்றுப்புள்ளியை இட்டு நிரப்பிவிடக்கூடாது. முடியாது என்பதும், முடியும் என்பதும் மனம் சார்ந்த வெளிப்பாடு. எதற்கெடுத்தாலும் என்னால் முடியும் என்ற வெளிப்பாட்டை வெளிப்படுத்துவோர் வாழ்வில் உயர் நிலைக்குச் செல்வர். முடியாது என்ற நினைதல் கொண்டோர் வாழும்போதே நடை பிணமாகவே கருதப்படுவர்.

உன் மனதுக்குள் இருக்கும் முடியாது என்ற அச்சம்தான் உன் முதல் எதிரி. நீ முடியாது என தயங்கி நிற்கும் நொடிகள்தான் உன் முதல் தோல்வி. மகிழ்ச்சியான வாழ்க்கை என்பது தடைகளற்ற வாழ்க்கை அல்ல. முடியும் என்ற நிலையில் தடைகளை வெற்றிகொண்டு வாழும் வாழ்க்கை. "நான் இளைஞனாக இருந்தபோது பத்துக் காரியங்கள் செய்தால் அதில் ஒன்பது தடவை தோல்வி அடைவதைப் பார்த்தேன். என் வாழ்க்கையில் தோல்வி அடைவதை நான் விரும்பவில்லை. ஒன்பது தடவை வெற்றி பெற தொண்ணூறு முறை முடியும் என முயற்சித்தால் வெற்றி கிடைக்கும்" இது பெர்னாட்ஷாவின் கருத்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதை விழுந்தால்த்தானே விருட்சமாகும். அதுபோலவே முடியும் என நினைத்தால் மட்டுமே வெற்றிகள் நிறைவேறும். முதலில் முடியும் என நினையுங்கள். எல்லாம் திருப்தியாக நிறைவேறும். வெற்றி என்பது அறிவாளிக்கு சொந்தமானதல்ல. அது முடியும் என்ற நம்பிக்கை உடையவர்களுக்கு மட்டுமே சொந்தமானது. முடியாது என்ற உணர்வுநிலையை முதன்மைப்படுத்துபவர்களின் வாழ்க்கை துயரத்தில் மட்டுமல்ல தற்கொலையிலும் முடிவுறுகிறது. முடிவுற்றும் உள்ளது.

உண்மையில் முடியும் என்ற நினைதல் வெற்றிக்கான வழிகளை தன்னிறைவோடு தரும். அதற்கு சோக்கிரடிஸ் கூறியதுபோன்று "உங்களை நீங்களே அறிந்துகொள்ள முற்படுங்கள்" தன்னை அறிந்து கொண்டவன் பலவீனங்களை சரிசெய்து கொள்வான். பலமுள்ளவனாக மாற்றம் கண்டு முடியாது என்ற முற்றுப்புள்ளியை அகற்றிவிட்டு இலக்கு நோக்கி பயணிக்க ஆரம்பிப்பான். தன்னிடம் உள்ள ஆற்றல்களை திரும்பட வெளிப்படுத்துவான். ஒரு மனிதனுக்குள்ள சிறப்பான தன்மையே செயற்படக்கூடியவன் என்பதுதான். ஒருபோதும் விரக்தியடையாது முடியும் என்ற உயரிய குணத்தை மனதில் வழக்கப்படுத்தி முயற்சியைத் தொடர வேண்டும். முடிவு சாதகமாக அமையும்.

பெருங் காரியங்கள் வல்லமையால் நிறைவுபெறுவதில்லை. முடியும் என்ற மனோபாவம் தருகின்ற ஊக்கத்தால் நிறைவேறுகின்றன. எனவே அன்னைக்கு பரிசுத்தமான அன்பைப் பரிசளி. ஏழ்மைக்கு முயற்சியை பரிசளி, எதிரிக்கு மன்னிப்பைப் பரிசளி, முடியாது என்ற மனதுக்கு முடியும் என்ற உணர்வைப் பரிசளி. வாழ்வு என்றும் சிறந்து விளங்கும். மகிழ்தலின் வசந்தகாலம் உன் பாதை எங்கும் பூக்களைச் சொரியும். என்னால் ஒன்றுமே முடியாது என்ற எண்ணத்தை தூக்கி எறிவோம். முடியும் என்றால் முடியும் என்ற ஆயுதம்கொண்டு புது சரித்திரம் படைப்போம்.

---

# குருபூஜை தினங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஜன | 19 | தை | 06 | ஞாயிறு | சண்டேசுரர் |
| ஜன | 23 | தை | 10 | வியாழன் | தாயுமானவ சுவாமிகள்<br>திருநீலகண்டர் |
| ஜன | 27 | தை | 14 | திங்கள் | நயினாதீவு முத்துக்குமாரசுவாமி |
| மார்ச் | 07 | மாசி | 23 | வெள்ளி | கச்சியப்ப சிவாச்சாரியார் |
| மார்ச் | 14 | மாசி | 30 | வெள்ளி | திருவள்ளுவர் |
| மார்ச் | 18 | பங் | 04 | செவ்வாய் | காரைக்காலம்மையார் |
| மார்ச் | 27 | பங் | 13 | வியாழன் | பரமகுரு சுவாமி |
| மார்ச் | 29 | பங் | 15 | சனி | குழந்தைவேற் சுவாமி |
| மார்ச் | 31 | பங் | 17 | திங்கள் | செல்லப்பா சுவாமி |

*பக்தி உணர்வு படைத்தவன் இறைவனுக்கு அடிமையாகின்றான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ வைப்போரை வாழும்போதே வாழ்த்துவோம்

*-திரு இ. தயாபரன்* அவர்கள்-

அரை நூற்றாண்டு காலத்திற்கு மேலாக, ஆன்மீகவாளராகவும் அன்பானவராகவும் அரவணைப்பவராகவும் வாழும் சிறந்த மனிதர் கலாநிதி செ. மோகனதாஸ் சுவாமி அவர்களை வாழ்த்தக் கிடைத்த வாய்ப்பினால் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

"கடமையைச் செய், பலனை எதிர்பாராதே" எனும் முதுமொழிக்கிணங்க வாழ்வோர் அருகிவரும் இன்றைய காலகட்டத்தில். வலது கை கொடுப்பதை இடது கை அறியா வகையில் சமய, சமூகப் பணிகளை திட்டமிட்ட வகையில் தொடர்ச்சியாக முன்னெடுத்து வரும் மோகனதாஸ் சுவாமி அவர்கள் மேலும் சிறப்புறச் செயற்பட நாம் அனைவரும் எம்மால் இயன்றளவு ஒத்துழைப்பை வழங்கவேண்டும் என்பது எனது அன்பானதும் பணிவானதுமான வேண்டுகோளாகும்.

மயில்வாகனம் சுவாமிகளின் சீடனாக சிறு வயதில் விளங்கிய சுவாமி அவர்கள் ஒரு குறுகிய வட்டத்துக்குள் தனது ஆன்மீகப் பணிகளை சுருக்கிக்கொள்ளாமல், தன்னைச் சுற்றியுள்ள சமூகம் சார்ந்து சிந்தித்ததோடு, தான் சுமந்த துயரங்களில் இருந்து அச் சமூகம் தன்னை விடுவித்துக்கொள்ள தன்னாலான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும் ஒரு பெருந்தகையாக விளங்குகிறார்.

எளியோருக்கும், இயலாதோருக்கும் அடைக்கலமாக விளங்கும் தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தின் மூலம் பயன்பெறும் அனைவரும் உடலாலும், மனதாலும் மேம் பட தேவையான அனைத்து வழிவகைகளையும் மேற்கொண்டு வருகிறார்.

1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஆச்சிரமத்தின் தேவைகளை பூர்த்தி செய்ய வன்னிப்பிரதேசம் முழுவதும் துவிச்சக்கரவண்டி மூலம் சுவாமிகள் பயணம் மேற்கொண்டதை யாரும் மறந்துவிட முடியாது. ஆச்சிரமத்தில் அடைக்கலம் தேடியவர்களுக்கு மேலதிகமாக எமது மக்களுக்கு எங்கெங்கு தேவைகள் காணப்பட்டதோ அங்கெல்லாம் நேரடியாகவே தேடிச்சென்று உதவும் நடைமுறையை இன்றுவரை பின்பற்றி வருகிறார். வன்னி, கிழக்கு, மலையகம் மற்றும் வடமத்திய மாவட்டங்களென அவர் பயணம் செய்யாத பகுதிகளில்லை எனலாம்.

கொரோனா நோய்த் தொற்றுக் காலத்தில் உதவி தேவை என்று அழைப்பு வந்த இடங்களுக்கெல்லாம், சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகளிடம் முறைப்படி அனுமதி பெற்று வீடுகளுக்குள் முடங்கிக் கிடந்த அன்றாட உழைப்பாளிகளுக்கு வாழ்வாதார உதவிகளை தொடர்ந்து வழங்கியிருந்தார். அதேபோல் எங்கு எப்போது பேரிடர் ஏற்பட்டாலும் அங்கு

*நற்செயலுக்கு நல்லெண்ணம் வித்தாகிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது சக தொண்டர்களுடன் உதவிப் பொருட்களுடனும், உணவுப் பொருட்களுடனும் நிச்சயமாக சமூகம் தரும் ஒருவராக சுவாமி அவர்கள் விளங்கினார். மலையகத்தின் மண்சரிவு வேளைகளிலும் கிழக்கின் வெள்ள அனர்த்தங்களின்போதும் அவரது அர்ப்பணிப்பைக் காண முடிந்தது.

தனது ஆன்மீக உணர்வு மற்றும் செயற்பாடுகள் காரணமாக, தன்மீது நம்பிக்கை வைத்து உள்ளூரிலும் வெளியூரிலும் வெளிநாடுகளிலும் வாழுகின்ற முருக பக்தர்களாலும், தொண்டர்களாலும், சமூக உணர்வாளர்களாலும் வழங்கப்படுகின்ற பணம் பொருள் அத்தனையும், தான் நம்பிக்கை கொண்டுள்ள நெறிமுறைகளை வளர்க்க உதவிடும் ஆலயங்கள் மற்றும் அறநெறிப் பள்ளிகளின் அபிவிருத்திக்கே பயன்பட வேண்டும் எனும் கொள்கையோடு செயலாற்றி வரும் சுவாமி அவர்கள் அவ்வாறான கோரிக்கைகள் எங்கிருந்து வந்தாலும், எந்த ஊடகத்தில் வந்தாலும் அவ் இடங்களுக்கு தேடிச்சென்று உதவும் மேலான பண்பை நாம் அவரிடம் காண்கிறோம்.

இறைவன்மீது அதீத பக்தி, பேச்சில் கனிவு, செயலில் வெளிப்படைத் தன்மை என அனைத்துமே முன்னுதாரணமான அவரது நற்பண்புகளாகும்.

கைவிடப்பட்ட ஆலயங்களைச் சீரமைத்தல், அறநெறிப் பள்ளிகள் தேவைப்படும் கிராமங்களில் அதற்கான கட்டிட வசதிகளை ஏற்படுத்தல், மிகவும் கஷ்டமான நிலைமைகளில் பணியாற்றும் அறநெறிப்பள்ளி ஆசிரியர்களுக்கு பொருளாதார உதவிகளை தொடர்ச்சியாக வழங்குதல், நலிவுற்ற நிலையில் வாழும் குடும்பங்களைச் சேர்ந்த பல்கலைக்கழக மாணவர்கள் தமது கல்வியைத் தடையின்றித் தொடர மாதாந்த உதவித் தொகையை வழங்குதல், சுத்தமான குடிநீர் வசதிக்காக அவதியுறும் மக்களுக்கும் மாணவர்களுக்கும் அதனை வழங்கி வைத்தல் என அனைத்தையும் ஆரப்பாட்டமின்றி மிக எளிமையான முறையில் உறுதியாக முன்னெடுத்துச் செல்லும் சுவாமி அவர்களின் வாழ்வும் அவர்தம் பணிகளும் மேலும் மேலும் செழிப்புற என்றென்றும் பிரார்த்திப்போம்.

"முருகன் தருகிறான். அதை நான் கொடுக்கிறேன்" என்று அடிக்கடி அவர் கூறும் வார்த்தைகளை நீண்டகாலத்திற்கு நாம் கேட்டுக்கொண்டிருக்க வேண்டும் என்பதே எம் அனைவரினதும் விருப்பமாகும்.

## பரமன் குருவே சந்நிதியானே

சந்நிதி வேலே சந்நிதி வேலே
சங்கடம் தீர்க்கும் சந்நிதி வேலே
எந்நிதியும் தரும் சந்நிதி வேலே
எங்களை ஏற்பாய் சந்நிதி வேலே

முத்தியின் ரகசியம் அறிந்தவன் நீயே - மும்
மூர்த்திகளும் போற்றும் தெய்வப் பெருமானே
பக்தி கொள் மனதைத் தந்தருள் வாயே
பரமன் குருவே சந்நிதியானே.

*-சின்னப்பு தனபாலசிங்கம்-*

*நிதானமும் உறுதியும் போட்டியில் வெற்றி தரும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகவத்கீதையின் தத்துவம்

## அத்தியாயம் - 15

(தொடர்ச்சி...

## குறிக்கோளும் அதனை அடையும் வழியும்

*-திரு பூ. சோதிநாதன்* அவர்கள்-

### 01) எது சிறந்த வழி?

கீதையின் பதினோராவது அத்தியாயத்தில் இறைவனின் பிரபஞ்ச வடிவத்தைப் பற்றிய புகழ்பெற்ற காட்சி மிகப் பெரியதாய் விவரிக்கப்பெற்றிருந்தது. அந்த வடிவை மனிதன் அடைவதற்கு ஆன்மாவின் பூரண பக்தி அன்றி வேறு வழி இல்லை என்பது கீதையின் பதினோராவது அத்தியாயத்தின் இறுதியில் தெரிவிக்கப்பெற்றிருந்தது. அந்த ஆலோசனையின் விளைவாக உடனடியாகவே ஒரு வினாவோடு கீதையின் பன்னிரண்டாவது அத்தியாயம் ஆரம்பமாகிறது. எல்லாமாயுள்ள பரமாத்மாவில் சீவாத்மா தன்னைத் தியாகம் செய்து தனது எல்லைகளைக் கடப்பதனூடாகவே அந்தப் பெரும் இருப்பை அல்லது பூரணத்துவத்தை அடையமுடியும். ஆத்மா தன்னை எங்குமுள்ள இறைவனின் நிலைக்கு உயர்த்தினாலன்றி அந்த அனுபவத்தை அறிவது சாத்தியமில்லை. ஆனால், ஆத்மாவைப் பொறுத்தவரையில் இத்தேவையை நடைமுறையில் நிறைவேற்றுவது சாத்தியமற்ற ஓர் அலுவலென்றே தோன்றுகிறது. அத்துடன், ஆத்மாவுக்குக் கிடைக்கக்கூடிய ஒரே வழி தன்னைக் கடவுளிடத்தில் சரணடைவதும், பணிவாகப் பக்திசெய்வதுமே ஆகும். சுதந்திர மில்லாத ஒரு குழந்தையின் நடத்தைபோல பூரணத்துவத்தில் ஆத்மா சரணடைந்து பணிய வேண்டுமா? எல்லாமாயுள்ள பரமாத்மாவில் சீவாத்மா தானற்ற நிலையில் இணைவதன்மூலம் பூரணத்துவ இருப்புக்குள் கடும் முயற்சிசெய்து தன்னை உயர்த்தவேண்டுமா! மேற்கூறிய இரண்டு வழிகளில் எது சிறந்ததாக இருக்கக்கூடும்?

### 02) ஆள்சாராத் தன்மை

உண்மையில் கீதாசிரியன் இந்த வினாவுக்கு விடையளிப்பதில் மிகவும் கருணை உள்ளவனாக இருக்கின்றான். பூரணத்துவத்தை எண்ணி ஆள்சாராத் தியானம் செய்வதிலுள்ள நடைமுறைச் சிக்கல்களின் வெளிச்சத்தில் அவன் அதற்கு அழுத்தமான ஒரு தீர்வை வழங்குகின்றான். ஒருவர் அதே இருப்புக்குத் தனது சொந்த ஆள்சார் உறவில் பக்திசெய்வது சிறந்த வழி எனக் கருதலாம் என்கிறான் கீதாசாரியன். இங்கு ஒன்றை விடுத்து மற்றதைத் தெரிவுசெய்வதில் எந்த ஒப்பீடும் அல்லது வேறுபாடும் தவிர்க்க முடியாதபடி தோன்றும். அத்துடன் தெரிவு செய்யாததைப் பொறுத்தவரையில் ஒரு குறைவும் இருக்கும். ஆனால், இங்கு அவ்வாறில்லை. விடுதலைக்காக ஆத்மா தன் ஆவலை வெளிப்படுத்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுள் பக்தி எந்தவகையிலும் ஆள்சாரா நிலையில் எல்லாமாயுள்ள இறைவனில் தன்னை உருகி மறையச் செய்யும் வேகத்தோடு ஒத்துப்போக முடியாது. உடலோடு கூடிய மனிதர்கள் உடல்பற்றிய எண்ணத்தை விலக்க முடியாது. தமது உடலிலே தமது பிரக்ஞையை வைத்திருப்பவர்களுக்கு முற்றும் ஆள்சாராத வகைக் கருத்தும் சிந்திக்க முடியாத ஒரு விடயமாகும். உடலோடு கூடிய ஒரு மனிதன் ஆள்சாராத் தன்மையைச் சிந்திக்க முடியாது இருப்பதனால் அந்த ஆள்சாராத் தன்மையைக் கற்பனை செய்ய முடியாது உள்ளது. ஆள்சாராத்தன்மையைப் பூரணமாக உணர்ந்து மெச்சக் கூடுமாயின் அப்படி மெச்சக்கூடிய ஆற்றலின் மட்டத்துக்கு ஒருவரால் உயரமுடியும். மனிதத் தன்மை பற்றிய பொதுவான கருத்துப்படி மனமானது ஆன்மீக ஆள்சாராத் தன்மையின் பொருளைப் புரிந்துகொள்ளாது. மனதினுடைய தன்மை அவ்வாறாய் இருப்பதால் "கடவுள் பக்தி தெரிவு செய்யக்கூடியதென்றும், ஒரே குறிக்கோளுக்கே அவ்விரண்டும் பாதைகளாகும் என்றும் நான் உணர்கின்றேன்" எனப் பகவான் கூறுகின்றார்.

## 03) ஆன்மவளர்ச்சி

இரண்டு முறைகளிலும் அடையவேண்டிய இலக்கு ஒன்றே. எனவே, எந்த முறையை நாம் மேற்கொள்வது என்பது அங்கு முக்கியமில்லை. ஒருவர் தவம் எனக் கருதிக்கொண்டு சித்திரவதை செய்வதற்குத் தன்னைத் தேவையற்ற முறையில் உட்படுத்திக்கொள்வது, ஆன்மிகப் பாதையில் வரவேற்கக்கூடியது அன்று. அதுவும் விசேடமாக உடல் அதற்குத் தயாராக இல்லாதபோது அது வரவேற்கக்கூடியதன்று. ஆன்மீகப் பாதையில் துன்பத்தை ஏற்றுக்கொள்வது அப் பாதையின் ஒரு பகுதியும் அன்று. உண்மையில் கீழ்மட்டத்தில் இருந்து உயர் மட்டத்துக்கான ஆன்ம வளர்ச்சி, உலகில் வளர்கின்ற மற்றைய எல்லாவற்றின் பரிணாமத்திலும் ஏற்படும் இயல்பான விரிவை ஒத்ததாகும். அத்துடன், ஏதாவது ஒன்று ஆரோக்கியமான வளர்ச்சி உடையதாக இருப்பின் அந்த வளர்ச்சி முறையில் துன்பத்துக்கு இடமில்லை. ஒரு மொட்டு மலருவது துன்பமான ஒரு செயன்முறையினால் அன்று. ஆனால் மொட்டை மலராக்குவது மொட்டைப் பழுதாக்குவதோடு, தேவையற்ற ஒரு முயற்சியும் ஆகும். கடவுள்மீது தியானம் செய்யும் ஆன்மீகப் பயிற்சி பிரக்ஞையைத் தெளிவாக்கும் ஓர் இயல்பான செயலாக அமையவேண்டும். அச் செயலானது சங்கல்பம், மனம், உணர்ச்சி, உடல் என்பவற்றில் எந்த வகையான நோவின் அழுத்தத்தையும் கொடுப்பதாக இருக்கக்கூடாது. இவை எல்லாவற்றையும் சிந்தித்துப் பார்க்கும்போது கடவுளை ஓர் உயர்ந்த புருஷனாகக் கொண்டு பக்தி செலுத்துவது வரவேற்கப்பெறும் என்றும், இந்த உலகிலுள்ள மனிதர்களுக்கு அது ஒன்றே சாத்தியமான வழி என்றும் கிருஷ்ண பகவான் கூறுகின்றார்.

## 04) இரண்டாவது வழி

"என்னில் உனது மனதையும், புத்தியையும் இணைத்துவிடு; என்னில் நீ உறைவாய்" என்று பகவான் அர்ச்சுனனுக்குச் செய்யவேண்டியதை எடுத்துக் கூறுகின்றார். மற்றைய எண்ணங்கள் எல்லாவற்றையும் விட்டு, எல்லா எண்ணங்களையும் கடவுள் சிந்தனையில்

*அதிக வேகம் அதிக தளர்ச்சியை அளிக்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்ம நிறைவோடு மூழ்கி இருப்பது மிக உயர்ந்த ஆன்மீகப் பயிற்சி ஆகும். கடவுளின் சந்நிதானத்தில் மட்டும் விழிப்புடன் உணர்வது எவர் ஒருவருக்கேனும் சாத்தியமாகும் எனின் அது அவருக்குக் கிடைத்த மிக உயர்வான அருளாசி ஆகும். அது ஒருவருக்குச் சாத்தியமாகுமெனின் அவர், அதனையே மேற்கொள்ள வேண்டும். அர்ச்சுனன் உட்பட அந்தப் பாதையில் செல்லும் ஒவ்வொருவருக்கும் வழங்கக்கூடிய மிக முக்கியமான வழிகாட்டுதல் அது ஆகும். இரவும் பகலும் கடவுள் எண்ணத்தை மட்டும் யார்தான் சிந்திக்கக்கூடிய மனமும், புத்தியும் உடையவர் ஆவர்? எனவே, கடவுளைத் தொடர்ந்து சிந்திப்பது நடைமுறையில் சாத்தியமில்லை என்று கண்டாலும் முடிந்தவரையில் தினமும் தியானத்தில் இருக்க முயற்சிசெய். கடவுளை மனதில் நிறுத்து. உனது கடவுளை நிலையாக மனத்தில் நிறுத்தத் தினமும் முயற்சிசெய். ஒருவர் ஒவ்வொரு நாளும் ஒரு மணியோ, இரண்டு மணியோ, மூன்று மணியோ தியானத்தில் அமரவேண்டும். முழுநாளும் இல்லாவிடினும் அந்தச் சில மணித்தியாலங்களாவது தொடர்ந்து கடவுள் சிந்தனையை மட்டும் எண்ண முடியுமா என்று பார்க்கவேண்டும். இதுவே ஒரு இரண்டாவது மாற்று வழியாகும். இது எல்லாவற்றையும் கவனத்தில் கொண்டு சில சலுகைகளையும் சேர்த்து வழங்கும் ஒரு போதனை ஆகும். ஆனால் இதுகூட மிகவும் கடினம் என்று மனதில் நினைக்கக் கூடிய மனிதர்கள் இருக்கிறார்கள்.

## 05) பல கடமைகள்

சிலரால் ஒரு மணிநேரம் கூடக் கடவுளை மட்டும் நினைத்துத் தியானம் செய்ய முடியாதுள்ளது. “அது எனக்கு ஏற்றதில்லை” என்று மனம் கூறுகிறது. அப்படியாயின் பின்னர் கடவுளின் புகழ்களைக் கொண்டு பாடு அல்லது தோத்திரம் செய். ஒரு கணமாவது கடவுளை நீ எண்ணும்போது கடவுளின் திருநாமத்தை நினைந்து பேரானந்த நிலையில் இரு. உனது இதயத்தின் ஆழத்தில் இருந்து மனப்பூர்வமாக கடவுளிடத்தில் அன்பு செலுத்து. தினமும் உனது அந்தச் செயல் தெய்வபக்தி நிரம்பியதாக இருக்கட்டும். கடவுளின் கரங்களில் ஒரு கருவிபோல வேலை செய். உனது தாய் தந்தையரிலும் மேலான கடவுளின் சந்நிதானத்தை ஒரு கணமேனும் மறவாமல் இரு. ஒரு குறிப்பிட்ட கால அளவுகூட எம்மால் உற்சாகத்தோடும் உணர்வுபூர்வமாகவும் கடவுளின் நாமத்தை உச்சரிக்க முடிவதில்லை. நாம் பயனற்ற, எண்ணற்ற வேலைகளில் ஈடுபட்டுக்கொண்டு இருக்கின்றோம். எமது மனநிலையைப் பொறுத்தவரையில் நாம் செயல்புரிபவர்களாக இருக்கின்றோம். எமக்கு உலகத்தில் நிறைவேற்ற வேண்டிய வேலைகள் அநேகம் உண்டு. நாம் வெவ்வேறு கடமைகளை நிறைவேற்றுவதில் ஈடுபட்டிருக்கின்றோம். இதுதான் எமது தற்போதய நிலை. (தொடரும்...

---

இறைவனைத் தேடி எங்கே செல்கின்றீர்கள்? துன்பப்படுபவர்கள், ஏழைகள், பலவீனர்கள், அங்கவீனர்கள் இவர்கள் எல்லோரும் இறைவனின் வடிவங்களே அல்லவா? ஏன் அவர்களை ஆராதிக்கக்கூடாது? கங்கைக் கரையிலே கிணறு தோண்ட வேண்டுமா? இந்த ஏழைகளை உங்கள் கடவுள் ஆக்கிக்கொள்ளுங்கள். அவர்களைப் பற்றிச் சிந்தியுங்கள். அவர்களுக்குத் தொண்டு செய்யுங்கள். அவர்களுக்காக பிரார்த்தனை செய்யுங்கள். அப்போது ஆண்டவன் உங்களுக்கு வழிகாட்டுவது அனைத்திலுமே உடனிருப்பார்.

*ஆறுதல் கூறுபவனுக்கு தலைவலி வராது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதியை வெல்ல மதியால் முடியும்

**– திரு கு. சிவபாலராஜா** அவர்கள் –

இறைவன் விதித்த விதிப்படிதான் எல்லாமே நடைபெறுகிறது என்று கருதுவது எவ்வளவு சரியானது என்பதை நாம் எண்ணிப் பார்த்தல் தேவையாகிறது. அப்படியாயின் விதியை வெல்ல முடியாதா என்னும் கேள்வி எழுகிறது. திருவள்ளுவர் தனது “ஊழ்” என்னும் அதிகாரத்தில் விதியையும் மதியால் வெல்ல முடியும் எனக் கூறியுள்ளார்.

தெய்வத்தால் ஆகாது எனினும் மெய் வருந்தக்
கூலி தரும்.

-குறள்.

இன்னொரு இடத்தில் அவர் கூறுவது, இப்பூவுலகில் நீண்டகாலம் நாம் வாழ்வதைப் பற்றியது.

மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தால்
நிலமிசை நீடு வாழ்வார்.

-குறள்.

எமக்கு மரணம் அல்லது இறப்பு என்று பேசப்படுவது ஒருநாள் வந்தே தீரும். ஆயினும் இவ்விறப்பினையும் சற்றுத் தள்ளிப் போடுவதற்கும் நம்மிடம் வாய்ப்புண்டு. இந்த வாய்ப்பினை நாம் பயன்படுத்தாமல் வெறுமனே காலம் கழித்து வருகின்றோம். “நிலமிசை நீடு வாழ்தல்” என்பது சற்று நோக்கவேண்டிய விடயம். இப் பாரினில் நீண்டகாலம் வாழ்வதால் நாம் அடையப்போகும் சுகம்தான் என்ன? அதனால் “மிசை நிலம் வாழ்தல்” பற்றியே வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார். அதாவது இறைவனது உலகில் நீண்டகாலம் வாழ்தல் நமக்கு நன்மைபயப்பதேயாம். நாம் முத்திப்பேறு பெறுவதற்கே அவாவி நிற்பது உண்மையே. அதற்கு யோக சாதனை ஓர் வழியாகவுள்ளது. நாம் திருவருளோடு கூடிப் பிறந்திருந்தால் முத்தி நமக்குக் கிடைத்திருக்கும். நம்மில் அனேகர் வினை கழியுமுகமாகவே இப் பூவுலகில் இறைவனால் படைக்கப்பட்டுள்ளோம். அப்பேர்ப்பட்டவர்களுக்கு யோக சாதனை பொருத்தமான வழியாகும்.

அட்டாங்க யோக சாதனை, சாதனை செய்வோர்க்கு ஏற்ற வழியென திருமூலரும் அருளியுள்ளார். இந்த யோக சாதனையானது இயமம், நியமம், ஆதனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என எட்டுறுப்புக்களையுடையது. இவற்றுள் மிக முக்கியமானது பிராணாயாமம் என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. பிராணாயாமத்தில் பிராணனாகிய உயிர்வளி நமது உடலைத் தக்க முறையில் பேணி, அதன் மேல் நிலைகளையும் தீர்மானிக்கும் ஓர் சக்தியாகச் செயல்படுகிறது. இயமம் தொடக்கம் பிரத்தியாகாரம் வரை ஹடயோகப் பயிற்சியாகும். இது உடலைத் தேற்றி உடற் தகுதிகளை சரியாகச் சீர்ப்படுத்தி அமைக்கிறது. உண்மையில் இயமம் தொடக்கமாக பிரத்தியாகாரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரை மிக அவசியமான பயிற்சியாகும். ஏனெனில் நமது உடலில் பல இயக்கங்கள் உள்ளன. அவை சீர்நிலையில் இல்லை. அதனால் நோய் உண்டாகின்றது. வயதுக்கு மிஞ்சிய முதுமை வெளிப்படுகிறது. உடல் சோம்பல் அடைகிறது. உடலில் நரை, திரை, மூப்புக்கள் உண்டாகின்றன. நமது உடல் ஆரோக்கியமாக இருப்பதை நாம் விரும்புதல் இயல்பே. அதற்காக நாம் தேவையற்ற மருந்து வகைகளைப் பாவித்து அதனால் பயன் கிடைக்காது அலைகின்றோம். இளமை ஓர் அரும் சொத்து. அதை யார்தான் விரும்பமாட்டார்கள். இளமையைப் பாதுகாக்கவென நாம் தக்க வழிகளை மேற்கொள்ள வேண்டாமா?

புறப்பட்டுப் புக்குத் திரிகின்ற வாயுவை
நெறிப்பட வுள்ளே நின்மல மாக்கில்
உறுப்புச் சிவக்கும் உரோமங் கறுக்கும்
புறப்பட்டுப் போகான் புரிசடை யோனே.

-திருமந்திரம் 575.

எனவே அதனால் நாம் விதியையும் மதியால் வென்று மீண்டும் இளமை பெறலாம் என்கிறது திருமந்திரம். எது கிடைப்பினும் இறைவனின் திருவருளை நினைக்காமல் இருக்க முடியாது. திருவருளால் தான் இறப்பும் தள்ளிப்போட முடிகிறது. எமனும் அவனது தூதர்களும் வந்து பார்த்து விட்டுத் திரும்பிப் போகும் நிலையேற்படும்.

நமது சரவோட்டமாகிய இயல்பாக நடைபெறும் நமது மூச்சு இடமூக்குத் துவாரம் வழியாக அல்லது வலமூக்குத் துவாரம் வழியாகவே நடைபெறுகிறது. இரண்டு மூக்குத் துவாரங்கள் வழியாக ஒரே நேரத்தில் நடைபெறுவதில்லை. ஒவ்வொரு மணித்தியாலத்திற்கும் ஒருமுறை நமது மூக்குத் துவார வழி சுவாசம் மாறி மாறியே நடைபெற்று வருகிறது. இரண்டு மூக்குத் துவாரங்களிலும் ஒரே சீராகவும் அது பன்னிரண்டு அங்குல தூர அளவிலும் இயங்குமாயின், நடு நாடியாகிய சுழுமுனை நாடி திறக்கப்பட்டு நமது சுவாசமும் அதன் வழியே நடைபெறத் தொடங்கும். இதை முத்திநிலைக்கான முதற்படி எனலாம். இந்த நிலை நமது விதியை மாற்றி எம்மைச் சமாதிநிலைவரை சேர்ப்பித்து விடும். இறைவனின் திருவருள் கிடைப்பின் சமாதி நிலைக்கு அப்பால் முத்திப்பேறு கிடைக்கும்.

அண்ட பிண்டச் சமநிலை என்பது நாம் தெரிந்துகொண்டுள்ள விடயமேயாகும். அண்டம் பெரியது. அளவில் எல்லைப் படுத்த முடியாத பேரண்டம் அது. பிரபஞ்ச வெளி என்பதுவும் அதுவேயாம். இந்த அண்டவெளி முழுமைக்கும் எமது உடலாகிய இப் பிண்டத்திற்குமிடையே நேரடி வெளித்தொடர்பு உண்டு. நமது உடலின் ஒன்பது வாயில்களின் வழியாக அண்டவெளியுடன் வெளித் தொடர்பு செய்யப்படுகிறது. நமது தோலில் உள்ள மயிர்த்துளைத் துவாரங்கள் பல நூறு வாயில்களும் வெளித் தொடர்பு உள்ளதாகவே உடலமைப்பு உள்ளது. நாம் உயிர் வாழ்வதற்குப் போதுமான அளவு சுவாசம் மூக்குத் துவாரம் வழி நடைபெறுகிறது. இந்த அளவு நாம் உயிர் வாழ்வதற்குப் போதுமானது. குதத்தின் வழி வெளியேறிக்கொண்டிருக்கும் அபானவாயுவானது நமது உடற் கழிவுகளை

*நல்ல விஷயத்தில் மட்டுமே கவனம் செலுத்திவந்தால் மனம் பளிங்குபோல தூய்மையாக இருக்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


(இரத்தத்தில் உள்ளவை) வெளியேற்றுகிறது. மல வாயு வேறு, அபான வாயு வேறு வேறானவை என்பதை உணர்தல் வேண்டும்.

எமது சுவாசத்தை சீராக்குதல் வேண்டும். நமது சரவோட்டம் என்பது உயிர் வாழுவே நடைபெறுகிறது. ஆனால் பிராணாயாமம் என்பது மூச்சுப் பயிற்சி செய்து நமது மூச்சினை ஒழுங்குபடுத்தும் அல்லது நெறிப்படுத்தும் ஓர் முக்கிய பயிற்சியாகும். இடைநாடி அல்லது வலது நாடி வழி காற்றை உள் இழுத்து பின்னர் அவ்வழியே காற்றை வெளியேற்றும் செயற்பாடு நடைபெறுகின்ற வேளையில் அவ்வளியில் சிறிதளவு உள்ளே கும்பகம் செய்யப்படுவது வழமையாகும். இதில் கும்பிக்கும் அளவு வாயு நமது உடல் பாதுகாப்பிற்குப் போதுமானது அல்ல. அதனால் பிராணாயாமம் செய்யும்போது கும்பகத்தின் அளவு அதிகரிக்கின்றது. இவ்வாறு அதிகரித்த கும்பகவளி எமது உடல் உள் பகுதிகளைச் சுத்திகரித்து ரேசகம் செய்யும்போது கழிவு வெளியேறுகிறது. அவ்வாயு பிராண சக்தியாக உடலெங்கும் பரவி நமது உடலை இயங்க வைக்கின்றது. சரவோட்ட நிலையில் இவ்வகைச் செயற்பாடுகள் சீராக நடைபெறுவதில்லை. அதனால் உடல் இயக்கம் சீரடைய வாய்ப்பில்லாமல், நோய்கள், குறைபாடுகள் என்பன உண்டாகின்றன. அதனால் நமது ஆயுள் குறைவடைகிறது. நரை, திரை, மூப்பு ஏற்படுகின்றன. நமது விதியும் அவ்வளவில் முடிவடைகிறது என நாம் நினைக்கிறோம்.

விதியை நமது மதியால் மாற்றுவதற்கு யோக சாதனை ஓர் தெரிவுசெய்யப்பெற்ற சிறந்த முறையாகும். சாதகன் முதலில் தெரிந்துகொள்ளவேண்டியது தனது விதி மாறப் போகின்றது என்பதாகும். இந்த நல்வழி இறைவனால் போதிக்கப்பட்ட வழியாகும். இறைவனின் இவ்வுதவியை உலகினர்க்கு எடுத்துரைத்துப் பாடிய பெருந்தகை திருமூலதேவ நாயனார் ஆவார்.

---

## என்றும் எம் நினைவில்...



அண்மையில் 07.01.2025 அன்று நாவற்குழியைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியர் அமரர் இ. சொக்கலிங்கம் அவர்கள் சிவபதமடைந்த செய்திகேட்டு மிகவும் ஆறாத் துயரடைகின்றோம்.

அமரர் தான் வாழ்ந்த காலத்தில் பலவித அறப்பணிகளைச் செய்ததோடு சந்நிதியான் ஆச்சிரமத்தின் வளர்ச்சிக்கும் ஆச்சிரமம் ஆற்றும் பலவித சேவைகளையும் மேம்படுத்தும் நோக்குடன் தன்னாலான பங்களிப்புக்களையும் வழங்கியதோடு மட்டுமல்லாமல் தனது சந்ததியினரையும் ஆச்சிரமத்தின்பால் ஈடுபட வைத்தது அன்னாரின் மகத்தான செயல் என்றே கூறவேண்டும்.

மாதாந்தம் வெளியீடு செய்யப்பட்டு வரும் ஞானச்சுடர் மலரின் வளர்ச்சியிலும் தன்னையும் ஒருவராக இணைத்து செயலாற்றியமையை என்றும் நாம் நினைவுகூர வேண்டியதாக இருக்கின்றது. அமரரின் ஆத்மா சந்நிதி வேலவனது பாதார விந்தங்களில் இளைப்பாற வேண்டி நிறைவு செய்கின்றோம்.

*மனம் எதைத் தீவிரமாக சிந்திக்கிறதோ அதுவாகவே மாறிவிடும் தன்மைகொண்டது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கயிலாயம்

– திரு வி. செல்வரத்தினம் அவர்கள் –

திருக்கயிலாயம் செல்ல நினைப்பவர்களுக்கு இது ஒரு சிறந்த வழிகாட்டியாக அமையும். அத்துடன் திருக்கயிலாயம் செல்ல இயலாதவர்களுக்கு இது ஒரு பெரிய வரப்பிரசாதமாகும்.

ஒருமுறை நாரதர் சத்யலோகம் சென்று பிரமதேவரை வணங்கி, "சுவாமி! உலகத்தில் எத்தனை சிவத்தலங்கள் உள்ளன? அவற்றுள் சிறந்தவை எத்தனை?" என்று கேட்டார். அதற்குப் பிரமதேவர் "உலகத்தில் அளவில்லாத சிவத்தலங்கள் உள்ளன. அவற்றுள் புனிதமாகக் கருதப்படுபவை ஏழாயிரத்து நானூறு தலங்கள். அவற்றுள் சிறந்தவை ஆயிரத்தெட்டுத் தலங்கள். இந்த ஆயிரத்தெட்டில் உயர்ந்தவை, போற்றத்தக்கவை நூறு தலங்கள். இந்த நூறில் சிறந்தவை அறுபத்தெட்டுத் தலங்கள். இந்த அறுபத்தெட்டில் போற்றி வணங்கக்கூடியவை இருபத்துநான்கு தலங்கள். இந்த இருபத்து நான்கில் மிகவும் சிறந்தவை எட்டுத் தலங்கள். அவையாவன:

திருக்கயிலாயம், காசி, மதுரை மீனாட்சி அம்மன் ஆலயம், திருக்காளத்தி
சிதம்பரம், திருவண்ணாமலை, திருவாரூர், திருவிடைமருதூர்

இந்த எட்டுத் தலங்களுள் திருக்கயிலாயத்தைத் தவிர்த்து ஏனைய தலங்களுக்கு மிக இலகுவாகச் சென்று தரிசனம் செய்யலாம். ஆனால் திருக்கயிலாயம் செல்வது சற்றுக் கடினம். எனவே, திருக்கயிலாயம் எங்கே இருக்கிறது, அத்தலத்திற்கு எப்படிச் செல்லலாம், அதற்கு வேண்டிய வழிவகை என்ன என்பது பற்றி இங்கே நோக்குவோம்.

ஓம் எனும் ஓங்காரநாதம் எதிரொலிக்கும் இடம், சிவபெருமான் குடிகொண்டுள்ள இடம், உமாதேவியார் புகுந்த இடம், கயிலாய மலையாகும். இந்தக் கயிலாய மலை இமயமலையில்தான் இருக்கிறது. இராமாயணத்தில், இமயமலையைப்போல் சிறந்த மலை உலகில் வேறு எதுவுமில்லை என்று கூறப்படுகிறது. ஏனென்றால் கயிலாய மலையும் மானசரோவர் ஏரியும் அந்த மலையில் இருப்பதால் இமயமலையைப் பற்றிச் சிறப்பித்துச் சொல்லப்படுகிறது.

முதலில் சிவபெருமானின் இருப்பிடமான கயிலாயமலையைப் பற்றிப் பார்ப்போம். கயிலாயமலைச் சிகரத்தின் உயரம் 22088 அடி (கடல் மட்டத்திலிருந்து) ஆகும். இந்தச் சிகரத்தினை வருடம் முழுவதும் வெண்பனி மூடியிருக்கும். இந்த மலை நீண்ட தொடர் உடையது. அதனைச் சுற்றிலும் மலைத்தொடர்கள் உள்ளன. இந்த ஒரு சிகரம் மட்டுமே கம்பீரமாக வெண்பனிப்போர்வையால் மூடப்பட்டு, ஏறத்தாழ இலிங்க வடிவில் அமைதியாகக் காட்சியளிக்கிறது. இதன் உச்சிக்கு யாரும் செல்லமுடியாது. மேருமலை எனப்படும் இந்தக் கயிலாயமலைதான் பூமியில் நடுநாயகமாக உள்ளது. இக் கயிலாயமலையிலிருந்து நான்கு மாபெரும் நதிகள் உற்பத்தியாகி நான்கு திசைகளில் பிரிந்து செல்கின்றன. அதாவது

*கோபத்தால் பிறருக்கு மட்டுமல்லாமல் நமக்கும் தீமையே உண்டாகிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரமபுத்திரா நதி கிழக்குத் திசையிலும், சிந்துநதி வடக்குத் திசையிலும், கர்னாலி நதி தென்திசையிலும், சட்லெஜ் நதி மேற்குத் திசையிலும் பிரிந்து ஓடி வருகின்றன. ஒரே மலையில் உற்பத்தியாகும் நதிகள் நான்கு வெவ்வேறு திசைகளை நோக்கிப் பாய்வதென்பது உலகில் வேறு எங்கும் கிடையாது. இந்த ஒரு இடத்தில்தான் இவ்வாறு உள்ளது. இது மிகவும் அபூர்வமானதாகும்.

கயிலாயமலை இமயத்தின் வட சரிவில் மேற்குத் தீபெத் நாட்டின் எல்லையில் இயற்கையினைக் கோயில் போல் பனிக்கட்டிகளை மேனி முழுவதும் போர்த்திக்கொண்டு மூலஸ்தான மூர்த்தியாக வெண்மையான பிரகாசத்துடன் விளங்கிக்கொண்டிருக்கிறது. கயிலாயமலை எப்போதும் இலிங்க வடிவில் தோன்றிக்கொண்டே இருக்கும். இந்த இலிங்கத்தின் பெயர் விசுவலிங்கம் ஆகும்.

திருக்கயிலாயம் இமயமலையில் இருக்கிறபடியால், சற்று இமயமலையைப் பற்றிப் பார்ப்போம். உலகத்திலுள்ள ஐந்து கண்டங்களில் பெரிய கண்டம் ஆசியாவாகும். இது உலகில் முழு நிலப்பரப்பில் மூன்றிலொரு பங்காகும். இதன் பரப்பளவு 165,00,000 சதுர மைல் ஆகும். உலகத்திலே வாழ்கின்றவர்களில் அரைவாசி வீதத்தினர் ஆசியாவில்தான் வாழ்கின்றனர். உலகத்தில் உயர்ந்த மலை இமயமலையாகும். இதுவே மலையரசு. இதன் உயரம் கடல் மட்டத்திலிருந்து 29144 அடியாகும். இம் மலைத்தொடர் கிழக்கு மேற்காக இரண்டாயிரம் மைல் வரை செல்கிறது.

இமயமலையின் தெற்கில் இந்தியாவும் தென்கிழக்கில் பர்மா (மியன்மார்), மலாயா, இந்தோனேசியா ஆகிய நாடுகள் உள்ளன. அரக்கன் யோமா என்ற பர்மாவின் மலை இமயமலையுடன் தொடர்பாக இருக்கிறது. எனவேதான் இமயமலையின் தென்கிழக்கில் பர்மா நாடு உள்ளது. இமயமலையின் தொடர் ஆசியாவின் எல்லைப் பகுதிகளைப் பிரிக்கிறது.

சிந்து நதி, யமுனா நதி, பிரம்மபுத்திரா நதி, கங்கை நதி போன்ற நதிகள் இம் மலையில் உற்பத்தியாகிக் கீழ்நோக்கி ஓடிக்கொண்டிருக்கின்றன. இமயத்தின் இரு சமவெளிக்கூடாக இப் பெரிய நதிகள் ஓடி முறையே சிந்து நதி அரேபியக் கடலுக்குப் போய்ச் சேருகின்றது. கங்கை நதி வங்காள விரிகுடாவுக்குப் போய்ச் சேருகின்றது. இவை ஒருபோதும் வற்றமாட்டாது. இம்மலையில் எந்த நேரமும் பனி மூடிக்கொண்டிருக்கும். அதனால் மலையின் அழகு குறைவதில்லை. இம் மலையை ஆங்கிலத்தில் எவரெஸ்ட் என்று கூறுவார்கள். தற்போது இம் மலையில் தேவர்கள் வசிக்கிறார்கள். வேடர்கள் தங்கள் மனைவி பிள்ளைகளுடன் அங்கே உள்ள குகைகளில் வாழ்கிறார்கள். மேலும் அங்கே பலவகையான கொடிய மிருகங்கள், பலவிதமான பறவைகள், பலவிதமான ஊர்வன வாழ்கின்றன.

மேலும் யாத்திரைக்கு வேண்டிய அரிய பொருட்கள் இங்கே கிடைக்கின்றன. இமயத்தில் ஆயுளை வளர்க்க வல்ல மூலிகைகளும், மரணத்தைத் தவிர்க்க வல்ல மூலிகைகளும் இருக்கின்றன என்று முனிவர்கள் கூறியுள்ளனர். இம் மலைச்சாரலில் வாழ்பவர்கள் நீண்ட ஆயுளைக் கொண்டவர்களாக இருப்பார்கள்.

இமயக் காற்றில் இறையொலி வீசுகின்றது. இமயத்தில் மெய்யுணர்வு பெற்றோர் பலருள்ளனர். இக்கால மக்களில் சிறப்பாகக் குறிப்பிட வேண்டியவர்கள் பிளவட்கசி அம்மையாரும் சாது சுந்தரசிங்குமாரரும் ஆவர். இவர்களின் வரலாற்றைப் பார்க்கும்போது அல்லது ஆராயும்போது

*நற்செயலில் ஈடுபடுபவர்களை கடவுள் ஒருபோதும் கைவிடமாட்டார்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் திருவருட் செல்வர்கள் என்று போற்றப்படுவார்கள்.

மேலும் இந்தியாவுக்குப் பல நாடுகளின் படையெடுப்பைத் தடுத்து நிறுத்தியுள்ள இயற்கை அரண் இம் மலையாகும். மண்ணுலகினின்று விண்ணுலகத்திற்குச் செல்கின்ற ஏணி இம்மலை என்று கூறப்படுகின்றது. இம் மலைத்தொடர் ஒரே சீராக இல்லாமல் ஒன்றின்மேல் ஒன்றாகப் படிப்படியாக உயர்ந்து காணப்படுகின்றது. இம் மலையின் பின்புறமாகப் பல சிகரங்கள் உள்ளன. இவற்றில் முக்கியமானவை நங்கை பர்வத், நந்தி தேவி, தவளகிரி என்பனவாகும்.

இமயமலை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு இருக்கின்றது. அவையாவன: பெரிய இமயம் , சிறிய இமயம், எல்லையற்ற இமயம்

மலையின் அடியிலிருந்து 5000 அடிவரை முதற்பாகம். அடுத்து 9000 அடிவரை இரண்டாம் பாகம் உள்ளது. அதற்கு மேல் மூன்றாம் பாகம். இது எல்லையற்ற இமயம். இந்த எல்லையற்ற இமயத்தில்தான் திருக்கயிலாயம் இருக்கிறது.

திருக்கயிலாயத்திற்குச் செல்வதற்குப் பல பாதைகள் உள்ளன. பர்மா நாட்டிலிருந்து போவது என்றால், வழியில் பல பயங்கரமான மிருகங்கள் தென்படும். யாத்திரிகர்களின் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தும். மற்றும் வடமேற்குத் திசையில் காஷ்மீர் என்னும் ஹிந்து சமஸ்தானத்திற்குத் தலைமைப் பட்டணமாயுள்ள ஸ்ரீநகரத்தினின்று கிழக்கு முகமாகச் சென்று திருக்கயிலாயம் போகலாம். இப்பாதையும் மிகவும் கஷ்டமானது. மற்றும் சில பாதைகள் மிகவும் ஏற்றமாகவும் மிகவும் தூரமாகவும் இருக்கும். டில்லிக்குப் போய் அங்கிருந்து இமயமலை அடிக்குப் போய் அங்கிருந்து போகலாம்.

(தொடரும்...

**தை மகளே! கூத்துப் பார்க்க வருகிறாயோ?**

பஞ்சம் பசி பட்டினிக்கு மக்கள்
பலியாவதை நிறுத்த பிச்சைகொண்டுவா,
பாண்வாங்க வழியில்லை பாதைதோறும்
புகழ்மாடம் கட்டமட்டுமா வருகிறாய்?
கொஞ்ச நெஞ்சமல்ல காசுபணம் கொட்டியே
கோடிகளைக் கரியாக்கவா பிறக்கிறாய்?
கொழும்போ ஊசலாடுகிறது! நீயும்
கூத்துப் பார்க்க வருகிறாயோ?
வெஞ்சமரால் விறகாகிய குடும்பங்களுக்கு
வேண்டிய நிதி கொண்டு வாமகளே
வீதிகள் வீடுகள் எங்கும் அவலம்
வில்லங்கம் ஒழிய எழுந்து வா!
நெஞ்செல்லாம் கனக்குது நீடுவாழ நிம்மதி இல்லை
நீள நினைந்து ஒற்றுமை கொண்டு வா,
நீ நினைப்பது போல நாடு உருப்படவில்லையே
நிலையான சமரச வாழ்வு கொண்டு வா!

-கே.எஸ். சிவஞானராஜா-

பிரார்த்தனைகளைவிடவும் மிகவும் உயர்ந்தது பொறுமைதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழித்துணை 91

– ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் அவர்கள் –

01 வேகமாய்ச் சிந்தைசொல்ல விவேகத்தை நழுவவிட்டு
ஆகவே மொத்தமந்த அவலத்தால் அழிவதிலும்
ஏகமும் போற்றுகின்ற நிதானத்தைக் கடைப்பிடித்து
சோகத்தை நீக்கிநல்ல சுகத்தினைப் பெறுதல் நன்றாம்.

02 பேர்பெற்ற அனைத்துமிப்போ தெருக்களில் மலிந்ததாலே
ஆர்வத்தை நழுவவிட்டு அசமந்தம் ஆதலிலும்
பாரினைவெல்ல எதிலும் பற்றோடு ஆர்வம் காட்டி
சோர்வினைப் போக்கிநல்ல சுகத்தினைப் பெறுதல் நன்றாம்.

03 கடும்போக்கு வழியை நாங்கள் காலத்தால் கையிலேந்தி
குடும்பத்தைக் கூடக்குலைத்து குறைவாழ்க்கை வாழ்வதிலும்
அடுக்குமோர் வழியாமந்த மென்போக்கைக் கடைப்பிடித்து
எடுத்ததோர் வாழ்வில் நல்ல நிறைவுகள் பெறுதல் நன்றாம்.

04 இனிதான வழியிருக்க அநியாய வழியைத்தேடி
மனிதாபி மானத்தோடு நல்மதிப்பையும் இழப்பதிலும்
கனிவோடு பேசிமற்றோர் களிப்புறும் வழியை நாடி
புனிதராய் வாழும் வாழ்வைப் புவியதில் பெறுதல் நன்றாம்.

05 ஏட்டிக்குப் போட்டியென்ற எதுகையில் கருமமாற்றி
ஈட்டிய செல்வத்தோடு இன்பத்தை இழப்பதிலும்
கூட்டியே வாழ்வில் நாங்கள் ஒருமித்த நிலையில் நின்று
தீட்டியே நன்மை பலதைத் திரட்டியே பெறுதல் நன்றாம்.

06 மயிலாடக் கண்டதுபோல் தானாட வேண்டுமென்று
குயிலாடிக் குரல்பெருமை தன்னையும் தான் இழத்தல் போல்
குடும்பத்தைப் பிறர்நடத்தக் கண்டுசில குழந்தைகளும்
தாமுமதை நடத்தவெண்ணல் தம்மைத்தாம் அழிப்பதாகும்.

*அதிகம் பேசாதவனை உலகம் அதிகம் விரும்புகிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07 கனியுதிர அதுபோலத் தானுதிர வேண்டுமென்று
காயுதிர்ந்து காலத்தால் அழிந்தொழிந்து போதல்போல்
பருவத்து சுகம் சிலதை பால்யத்தில் பெற எண்ணல்
பால்யத்தினோடுபின் பருவத்தையும் அழிப்பதாகும்.

08 மான்பாய அதுபோலத் தான்பாய வேண்டுமென்று
மரை பாய்ந்து மரத்தோடு மோதித்தான் அழிதல்போல்
விரைவாகப் பிள்ளைகளும் விபரத்தை அறியாமல்
இல்லறத்துள் புகஎண்ணல் இல்வாழ்வை அழிப்பதாகும்.

09 கானல் மண்தெறிக்கக் கண்டுஅதை நீரென்று
கன்று ஒன்று குடிக்க ஓடிக் கானகத்தில் தொலைந்திடல்போல்
கவர்ச்சியினைக் கண்டுசில பிள்ளைகளும் பின்செல்லல்
போகுமிடம் தெரியாமல் பொறியொன்றுள் வீழ்வதாகும்.

10 தாய்பறக்க அதுபோலத் தாம் பறக்க வேண்டுமென்று
குஞ்சுகளும் பறந்துபின் பருந்திற் கிரையாதல் போல்
சிறுவர்களும் பருவத்திற் கப்பாலே பறக்க எண்ணல்
விசமிகட்கு விருந்தாகி வாழ்வதனை அழிப்பதாகும்.

**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னப்பணிக்கும்**
**மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப்**
**பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர்**
**கீழே உள்ள முகவரியுடன்**
**தொடர்பு கொள்ளவும்.**

**காசுக்கட்டளை**
செந்திவேல் மோகனதாஸ்
சந்நிதியான் ஆச்சிரமம்,
தொண்டைமானாறு.
தொ.இல – 0213219599, 0212263406

**காசோலை**
செந்திவேல் மோகனதாஸ்
க.இல – 7342444
இலங்கை வங்கி,
பருத்தித்துறை.

**Swift code - BCEYLKLX 028 - 7342444**

E.mail : suthanm329@gmail.com
: sannithiyan@hotmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண் திறக்கும் கல்வி

– திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்கள் –

என்னதான் நாம் இன்றைய காலகட்டத்தில் விஞ்ஞான ரீதியில் முன்னேற்றம் கண்டிருந்தபோதும், அந்த முன்னேற்றத்தை முழுமையாக எவருமே உபயோகித்ததாக, உபயோகிப்பதாக இல்லை. பெரும்பாலும் இவை பெருவாரியான அழிவுகளுக்குக் கைகொடுத்து வருகின்றன. இந்த விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள் பல என்பதை யாம் இன்று கண்ணாரக் காண்கின்றோம். கண்டு கலங்குகின்றோம். கல்வி தகவல்துறை ஆகிய துறைகளில் விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளின் நற்பயன்கள் நன்மையளித்திடும். எனினும் போர்த்துறையிலே விஞ்ஞானத்தின் வளர்ச்சி என்னதான் நன்மையைத் தருகின்றது! இதற்குச் சாதகமான பதில் கிடையாது. எமது முன்னோர்கள் கல்வி கற்றதன் நோக்கமே அறியாமை நீங்கவன்றோ! இதன் காரணமாக இறைவனை அறிந்து அவன் திருவடிகளை அடைய சந்தர்ப்பங்கள் அமைந்தன. அவற்றுள் இளம் சிறார்கள் கற்றவை எவை என்று பாருங்கள். ஔவைப் பாட்டியும் மற்றும் பெரியோர்களும் தந்த நீதி நூல்களான ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நன்னெறி, நல்வழி, வெற்றி வேற்கை, நான்மணிக்கடிகை போன்றவை அரிய எளிமையான நூல்களாம். இவற்றில் இல்லாத புதிய அரிய கருத்துக்கள் இன்று தோன்றியுள்ளதாக பெரிதாக அடித்துக் கூறிவிட முடியாது. அவ்வண்ணம் தோன்றியிருந்தாலும் இவை ஆத்மீக வளர்ச்சிக்கு பெரிதாக ஒன்றும் சாதித்ததாக, சாதிக்க வைப்பதாக இல்லை. "அ" என்றால் "அம்மா" என்ற காலம் போய் "அ" என்றால் "அப்பிள்" என்கிறது அரிவரி நூல். அப்பிள் எப்போது தமிழ்ச் சொல் ஆனது? அந்தோ பரிதாபம்!

முற்காலத்திலே ஆசிரியர்கள் மூலம் மாணவர்கள் நீதி நூல்களைக் கற்று அவற்றை மனனஞ் செய்து பொருளைத் தெளிவாக அறிந்து அதன் வழி நடந்து சீரிய வாழ்க்கை ஒன்றை வாழ்ந்தார்கள். இவ்வகைக் கல்வியால் அறிவு வளர்ந்தது, குருபக்தி வளர்ந்தது, பணிவு பிறந்தது, ஆத்மீகம் மிளிர்ந்தது, ஆபத்து மறைந்தது. இதுவே கல்வியின் உண்மையான பயன்.

இத்தகைய நீதி வாக்கியங்களை மனனம் செய்ய வேண்டிய காலம் இளமைப் பருவம். மாணவப் பருவம். இவ் அறிவு பின்னர் உரிய காலத்தில் வளர்ந்து அவ்வப்போது நற்பயன்களை அளித்திடும். "தொட்டிற் பழக்கம் சுடுகாடு வரைக்கும்" என்பது சான்றோர் வாக்கு.

"கற்றதனால் ஆய பயனென்கொள் வாலறிவன் நற்றாள் தொழார் எனின்" என்ற வள்ளுவர் வாக்கை யாம் இங்கு தொடர்புபடுத்திப் பார்க்கலாம். எந்த ஒரு கல்வியும் ஆத்மீக வளர்ச்சிக்கு வழிகாட்டியே ஆகவேண்டும். எமது முன்னோர் நீதி நூல்களைத் தாம் கற்றதோடு தமது பிள்ளைச் செல்வங்கட்கும் அவற்றின் பொருளை உணர்த்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தகைய கல்வியை ஊட்டி அவர்களும் நன்னெறியில் வாழ வழி வகுத்தார்கள். சமய சாஸ்திரங்களைக் கற்று விளங்கிக்கொள்வதற்கும் நீதி சாஸ்திரக் கல்வி இன்றியமையாதது. இதனால் அன்றைய சிறார்கள் சமயத்தைப் புரிந்துகொள்ளும் அறிவைப் பெற்றிருந்தார்கள்.

இன்றைய கல்வி முறையில் பண்பாடும் ஆன்மீக அறிவும் சுருங்கி அருகிக்கொண்டே போகின்றது என்று கூற இடமுண்டு. காரணம், கல்வி அறிவு, உத்தியோகம் தேடவும், பணம் சம்பாதிக்கவும் என்ற எண்ணம் எம்மவர் மனதில் தோன்றியுள்ளது. நீதி நூல்கள் இன்று இளம் பிள்ளைகளுக்கு பெருமளவு போதிக்கப்படுவதில்லை. இவற்றை வளர்ந்தபின் அவர்கள் தாங்களாகவே கற்றுப் புரிந்து கொள்வார்கள் என்றோர் அபிப்பிராயமும் துரதிஸ்டவசமாக நம்மவரிடையே சொல்லப்படுகின்றது. இதனை என்னவென்று நாம் சொல்வது?

கண்கெட்ட பின் சூரிய நமஸ்காரமா? நல்லவை நற்கருத்துக்கள் பசுமை நிறைந்த இளம் பிஞ்சு நெஞ்சங்களில் அல்லவா விதைக்கப்பட வேண்டும்!

சமய அறிவு, பொறுமை, நிதானம், புரிந்துணர்வு, விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு இவற்றை எமக்கு தருவன, அறிய வைப்பன நீதிநூல்களேயாம். இவற்றை இளஞ்சிறார்கள் கற்காவிட்டால் அவர்களுக்கு தாம் செய்வது சரியா தவறா என்பதே புரியாத ஒரு நிலை ஏற்பட்டுவிடும். எனவே ஐந்தில் வளையாததை ஐம்பதில் வளைத்துவிட முடியாது. இதனால் சிலர் தாம் செய்யும் தவறை சரி என தம்மளவில் நினைத்துக்கொண்டு செயற்படுவதை யாம் காண்கின்றோம். இது எமது எதிர்காலச் சந்ததியினரின் நல்ல வாழ்வுக்கு மிக ஆபத்தை விளைவிக்க வாய்ப்புண்டு. மனித குலப் பண்பாட்டழிவுக்கு இது ஒரு காரணமாக அமையவும் இடமுண்டு. இதனை ஒரு அற்ப விஷயமாக யாம் கருதிவிட முடியாது.

இன்றைய பாடத்திட்டங்களில் ஓரளவு சமய சம்பந்தமான தேவாரப் பாடல்கள், பாடங்கள் இடம்பெற்றுள்ளபோதும் ஆன்மீக கல்விக்கும், இங்கே நற்பண்பை வளர்க்கவும், போதிய அளவு இடம் கொடுக்கப்பட்டுள்ளதாக ஏற்கமுடியவில்லை. மாணவர்களது பொன்னான நேரம் பாடசாலைகளிலேயே கழிகின்றது. எனவே, அங்கேதான் அவர்களது பிஞ்சு நெஞ்சங்களில் பண்பும் ஆன்மீகமும் விதைக்கப்பட வேண்டும். இந்த உண்மையை உரியவர்கள் கவனத்திற்கொள்ள வேண்டும். நடக்குமா?

---

*உலகில் உள்ள மதங்கள் யாவும் நன்மையையே போதிக்கின்றன. சிறந்தவை களையே செப்புகின்றன. எனவே தீயவர்களாக வாழ்பவர்கள் யாராக இருந்தாலும், அவர் எந்த மதத்தையும் சார்ந்தவரல்ல என்ற முடிவுக்கே வரவேண்டும்.*

*நம்மிடமெல்லாம் பகையை வளர்ப்பதற்குரிய சமய உணர்ச்சி இருக்குமென்றால் நாம் அந்த மதத்தைச் சார்ந்தவரென்று சொல்லிக்கொள்ளவே அருகதை இல்லாதவர்கள்.*

*சிறிய விடயங்கள்தான் நம் மனத்தை கலக்கித் துன்பம் அளிக்கின்றன. ஒரு யானையைத் தவிர்த்துப் போகக்கூடிய எமக்கு ஒரு ஈயைத் தவிர்த்துப் போகமுடிவதில்லை. கஸ்டம் வந்துவிட்டதே என்று கலங்காதீர்! கடவுளைத் தவிர குறைபாடு இல்லாதவர்கள் எவருமே இல்லை. வாழ்க்கை முழுவதும் கஸ்டம் நீடிக்காது என்பதை உறுதியாக நம்புங்கள்.*

*அரிய சாதனைகள் அனைத்தும் வலிமையினால் செய்யப்பட்டவை அல்ல. விடாமுயற்சியினால்தான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தில்லைக் கூத்தனின் ஆடல் காண வாரீர்

தொடர்ச்சி...

—திருமதி சிவனேஸ்வரி பாலகிருஸ்ணன் அவர்கள்—

## பூலோக கைலாசகிரி சிதம்பரம்

"அம்பலத்தான் ஆடல்காண ஆயிரம் கண் வேண்டாமோ!"

தாண்டவன்! தில்லையில் திருநடனம் புரியும் சிவபெருமானின் பெயர். அந்தத் திருப்பெயரையே தம் பிள்ளைக்குச் சூட்டினர் அந்தப் பெற்றோர்.

ஆதி மும்மூர்த்திகள் என்று அழைக்கப்படும் சீர்காழி மூவரில் முத்துத் தாண்டவர் இசைவேளாள குலத்தில் பிறந்தவர். சிறுவயதிலேயே இவருக்கு என்ன நோய், ஏது நோய் என்று தெரியாத ஓர் நோய் எதனால் வந்தது என்று தெரியாத ஒரு நோய் (தொழுநோய்) வந்துவிட்டது. அவரை எல்லாரும் ஒதுக்கிவிட்டார்கள். வேதனையில் தவித்த அவருக்கு யாரும் ஆதரவில்லை. ஒருவேளை உணவுகூடக் கிடைக்காமல் தவித்தார். அந்த நிலையிலும் தில்லைக்கூத்தனை மறவாது பாடியும் ஆடியும் தொழுது வணங்குவார்.

ஒருநாள் சீர்காழி கோவிலுக்குச் சென்றிருந்த அவர் பசியினால் மயங்கி விழுந்து விட்டார். இது தெரியாமல் குருக்கள் கோயிலைப் பூட்டிக்கொண்டு சென்றுவிட்டார். சிறிது நேரத்தில் விழித்துக்கொண்ட தாண்டவர் தான் கோவிலுக்குள் அடைபட்டிருந்ததை எண்ணி வருந்தினார். திகைத்துப் போய் இறைவனை எண்ணிக் கதறினார். பசி, நோய் வேதனையில் வருந்தி அம்மையப்பனை நினைந்து அழுது பாடிக்கொண்டிருந்தார்.

அப்போது ஒரு சிறுமி அங்கே வந்தாள். பசியில் தவித்துக்கொண்டிருந்த அவருக்கு அன்போடு உணவளித்தாள். அந்தச் சிறுமி யாரென்று தெரியாமலே தன் குறைகளைச் சொல்லி அழுதார்.

"நீங்கள் சிதம்பரம் செல்லுங்கள்" என்றாள் அந்தச் சிறுமி. சிதம்பரமா? எதற்கு? "நடராஜப் பெருமானைத் தரிசிப்பதற்குத்தான்" என்று சொல்லிவிட்டுச் சிரித்தாள் அந்தச் சிறுமி. அந்தக் கோயிலில் நீங்கள் முதல் சந்திக்கின்ற பக்தர் என்ன சொல்கிறாரோ அதை வைத்துப் பெருமான்மீது ஒரு பாடல் பாடுங்கள் என்றாள்.

"பாடலா? நானா? என்று திகைத்தார் தாண்டவர். எனக்குப் பாடலெல்லாம் எழுதத் தெரியாதே?

"ஐயன் அருள் இருந்தால் எல்லாம் வரும். புறப்படுங்கள்"! என்றாள் அந்தச் சிறுமி. அதன்பிறகு சிறுமியைக் காணவில்லை. இதுவும் இறை அருளே எனப் புரிந்துகொண்ட தாண்டவர் சிதம்பரம் புறப்பட்டார். அங்கே கோயிலுக்குள் நுழைந்தவுடன் ஒருவர் பூலோக

*மகிழ்ச்சியாய் நீ வீணாக்கிய தருணங்களெல்லாம் வீணானவையல்ல.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைலாசகிரி சிதம்பரம் எனச் சொன்னார். இதனைக்கேட்ட மறுகணம் தாண்டவருக்குப் பாடல் பிறந்தது. பெருமானை எண்ணி மனமுருகிப் பாடினார்.

பூலோக கைலாசகிரி சிதம்பரம் அல்லால் புவனத்தில் வேறும் உண்டோ
சாலோக சாமீப சாருப சாயுச்ச
சபைவாணர் ஆனந்தத் தாண்டவம் புரிவதால்
பூலோக கைலாசகிரி சிதம்பரம்!

இந்தப் பூலோகத்தில் ஒரு கயிலாயக்கிரி இருக்கிறதென்றால் அது சிதம்பரம்தானே! வேறேது? சிதம்பரத்துக்கு இந்தப் பெயர்வரக் காரணம் முத்தியில் நான்கு வகைகள், சாலோகம், சாமீபம், சாருபம், சாயுச்சியம். அந்த நான்கிற்கும் நாயகனான சிவபெருமான் சபாநாயகர். அவர் அங்கே தாண்டவம் புரிவதால்தான்!

சிவபெருமானின் அற்புதத் திருநடனம் பற்றிய மிகப் பிரபல்யமான பாடல் "ஆடிக் கொண்டார்..." சிவபெருமான் ஆடுகின்றார். அந்த அற்புதக் காட்சியைக் காண ஒரு கண் போதுமா? ஆயிரம் கண்கள் வேண்டுமே!

ஆடிக் கொண்டார் அந்த வேடிக்கை காணக்
கண் ஆயிரம் வேண்டாமோ!
நாடித் துதிப்பவர் பங்கில் உறைபவர் நம்பர் திருச்
செம்பொன் அம்பலவாணர்.
(ஆடிக் கொண்டார்)

பங்கயச் சிலம் பைந்தாடப் பாதச்
சதங்கைகள் கிண்கிண் என்று ஆட
பொங்கமுடனே உரித்து உடுத்த புலித்
தோல் அசைந்தாட
செங்கையில் ஏந்திய மான் மழு ஆடச்
செம் பொன் கழற் கண் முயலகன் ஆட
கங்கை இளம் பிறை செஞ்சடை ஆட
கனக சபைதனிலே
(ஆடிக் கொண்டார்)

ஆர நவமணி மாலைகள் ஆட
ஆடும் அரவம் படம் விரித்தாட
சீர் அணி கொன்றை மலர்த்தொடை ஆட
சிதம்பரத் தேர் ஆட
பேரணி வேதியர் தில்லை மூவாயிரம் பேர்களும்
பூஜித்துக் கொண்டு நின்று ஆட
காரணிகாளி எதிர்த்து நின்றாடக்
கனக சபைதனிலே. (ஆடிக் கொண்டார்)

*செயல்புரியாத மனிதனுக்கு தெய்வம் ஒருபோதும் உதவி செய்யாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்த கணபதி வேலர் நின்றாட
நின்று அயன் மாலுடன் இந்திரன் ஆட
முப்பத்து முக்கோடி தேவருடனே
முனிவரும் நின்று ஆட
மெய்ப்பதி மேவும் பதஞ்சலி ஆட
வியாக்ர பாதரும் நந்தியும் ஆட
ஒப்பற்ற சிவகாமி அம்மையும்
கூடவே நின்று ஆட
(ஆடிக் கொண்டார்)

தம்மை நாடித் துதிப்பவர் பக்கத்தில் எழுந்தருளுவர். நம்முடைய பெருமான் திருச்செம்பொன் அம்பலத்திலே ஆடும் நடராஜர்!

அவர் ஆடுவது மட்டுமா? இன்னும் என்னவெல்லாம் ஆடுகின்றது. தாமரை போன்ற அவர் திருவடிகளில் சிலம்பும், சதங்கைகளும் கிண்கிண் என்று ஆடுகின்றன. அவரது செஞ்சடையிலுள்ள கங்கையும், பிறைச் சந்திரனும் அவர் உரித்து உடுத்திய புலித்தோலும் அசைந்து ஆடுகின்றது. அவர் ஏந்திய மானும் மழுவும் ஆடுகின்றன.

அவர் காலிலே உள்ள செம்பொன்னாலான வீரக் கழல். அங்கே இருக்கின்ற முயலகனும் ஆடுகிறான். கனகசபையிலே சிவபெருமானின் நடனக்காட்சி இப்படிப் பேரழகாக இருக்கிறது.

சிவபெருமான் அணிந்திருக்கும் மாலையிலே உள்ள பலவிதமான மாலைகள் ஆடுகின்றன. அவர் அணிந்திருக்கும் பாம்பும் படமெடுத்து ஆடுகின்றது. அழகிய கொன்றை மலர் மாலை ஆடுகிறது.

சிதம்பரத் தேர் ஆடுகின்றது. தில்லை வேதியரான மூவாயிரம் பேரும் சிவபெருமானைப் பூஜித்தபடி ஆடுகிறார்கள். காளியும் எதிரே நின்று ஆடுகிறாள். கனக சபையினிலே சிவபெருமானின் திருநடனக் காட்சி இது!

ஒரு பக்கம் கணபதி, இன்னொரு பக்கம் முருகன், வேறொரு பக்கம் திருமால், பிரமன், இந்திரன், முப்பத்து முக்கோடி தேவர்கள், முனிவர்கள், பதஞ்சலி முனிவர், வியாக்ரதபாதர் நந்தி எல்லாரும் ஆடுகிறார்கள். ஒப்பற்ற சிவகாமி அம்மையும் எம்பெருமான் திருநடனத்தில் கலந்து கொள்கிறாள். இந்த நடனத்தைக் காண நாம் என்ன தவம் செய்தோமோ! என சிதம்பர நாதனின் பெருமைகளை எண்ணிப் பாடுகிறார் முத்துத் தாண்டவர்.

ஒருமுறை அவர் கோயிலுக்குச் சென்றபோது ஒரு பாம்பு அவரைத் தீண்டிவிட்டது. தன்னைக் காக்க வேண்டுமென இறைவனையே மருந்தாக எண்ணிப் பாடினார்.

"அருமருந்து ஒரு தனிமருந்து இது அம்பலத்தே கண்டேனே"

செல்வத்தோடும் நன்மையோடும் வரும் மருந்து. தில்லை அம்பலத்தில் ஆடுகின்ற மருந்து. வினைகளை அறுக்கும் மருந்து. அடியார்களின் ஏழ்மை நிலைகண்டு இரங்கும் மருந்து.

கொன்றை மலரும் தும்பையும் அணிந்த மருந்து. அன்னையாம் மலைமகளை அன்போடணைத்த மருந்து. கனகசபையில் ஆடும் மருந்து. மாணிக்கவாசகர் கண்ட மருந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவர்கள் எல்லாம் போற்றும் மருந்து. ரிஷிகளுக்குக்கூட எட்டாத அரிய மருந்து. சந்திர சூரியர் காணாத மருந்து, தானே முளைத்து தழைத்ததிருமருந்து, திருத்தித் தித்தி என்று ஆடும் மருந்து. அடியார்கள் நெஞ்சில் வாழும் மருந்து. மார்க்கண்டேயருக்காகக் காலனை உதைத்த மருந்து.

இப்படி முத்துத்தாண்டவர் பாடியதும் விஷம் தானே இறங்கியது. பெருமானின் அருளை எண்ணி உருகினார் முத்துத்தாண்டவர். ஒவ்வொரு நாளும் முத்துத்தாண்டவர் பாடிய பாடல்களுக்கு இறைவன் ஐந்து பொற்காசுகள் தந்ததாக நம்பிக்கை.

ஆடல்வல்லான், கூத்தப்பிரான், மாயக்கூத்தன் என்று பலவாறு போற்றப்படும் நடராஜப் பெருமானது தொடர்ந்த ஆடலிலேயே உலகம் நிலைபெற்று இயங்குகிறது.

அந்த ஆடும் நாதனின் அம்பலவாணனின், சிவகாமிநேசனின் ஆனந்த அற்புத நடனத்தை நாமும் காணவேண்டிப் பிரார்த்திப்போமாக! (தொடரும்...

## தைப் பொங்கல் திருநாளே வருக!

உலகெங்கும் வாழ்கின்ற உழவரெல்லாம்,
உழவு தொழில் செய்திடவே, தமக்கு என்றும்
பலவழிகளிலும் உதவும் பகலவனுக்கு, மிக்கப்
பற்றுடனும், நன்றியுணர்வோடும், புதுக்
கலசங்களிலே அமுதப் பொங்கல் பொங்கி
கடமை உணர்வோடு படையல் இட்டுப்
பலரோடும் பகிர்ந்துண்ணும் எங்கள் அந்தப்
பைந்தமிழர் திருநாளே வருக! வாழ்க!

வயற்காட்டில் உழைத்த பயன், உழவர் வீட்டு
வாசலுக்கு வந்ததனால் வளங்கள் பொங்க
அயலவர்கள், சுற்றத்தார் அனைவரோடும்
அகமகிழ்ந்து புதிரெடுத்துப் பொங்கல் இட்டு
நயந்து கொண்டாட வந்த நாளே! எங்கள்
நற்றமிழா பொங்கல் திருநாளே! நின்னை
உயர்வாகப் போற்றி வரவேற்கின்றோமே!
உனை வாழ்த்திக் கவிமாலை சூடுகின்றோமே!

அல்லும் பகலும் வயற்காட்டிலே, நிதம்
அயராது உழைக்கும் எம் உழவர்தம்மின்
நல்லுழைப்பாலன்றோ நல் வளங்கள் பெற்றோம்!
நாட்டினிலே பசி பஞ்சம் நீங்கச் செய்வோம்!
வல்ல நம் உழவர்களின் வாழ்வில் மகிழ்வு பொங்க,
வற்றாது செல்வங்கள் அவர் வாழ்வில் பெருக,
நல்வழி காட்டி வா! நாங்கள் ஏத்தும்
நன்னாளே! பொன்னாளே! தைப்பொங்கல் நாளே!

-கி. குலசேகரன்-

*சிறிதளவு உள்ளவன் ஏழையல்ல. ஆசை அதிகம் உள்ளவனே ஏழை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதனைத் தமிழன் விருது வழங்கிக் மதிப்பளிக்கப்பட்டார் ஆச்சிரம சுவாமி மட்டக்களப்பு மண்ணில் வைத்து உயர் கௌரவம்

– திரு க. கைலைநாதன் அவர்கள் –

டான் தொலைக்காட்சியின் 2024ஆம் ஆண்டிற்கான சாதனைத்தமிழன் விருது சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி செ.மோகனதாஸ் சுவாமிகளுக்கு வழங்கப்பட்டது. கடந்த 31.12.2024 இரவு மட்டக்களப்பு தனியார் பஸ் நிலையத் திறந்தவெளி அரங்கில் டான் குழுமத்தின் ஏற்பாட்டில் பிரமாண்டமான டிஜிற்றல் மேடையில் இடம்பெற்ற புதுவருட வரவேற்பு விழாவின் போது ஆயிரக்கணக்கான மக்கள் மத்தியில் இந்த விருது கையளிக்கப்பட்டது.

புத்தாண்டு வரவேற்பு விழாவிற்கென மட்டக்களப்பு நகர் புதுக்கோலம் பூண்டிருந்தது. வீதியெங்கணும் வண்ண விளக்குகள், ஒலிபெருக்கிகள் என மிகப்பெரும் விழாவிற்கான கட்டியத்தைக் கூறிநின்றன. மறுபுறத்தில் வீதிப் போக்குவரத்துப் பொலிசார் பலர் வாகனங்களையும் மக்களையும் ஒழுங்குபடுத்தி நிகழ்ச்சியின் வெற்றிகரமான நிலவுகைக்கு உதவிய வண்ணம் இருந்தனர்.

மட்டக்களப்பு மண்ணின் பிரமுகர்கள் பலர் அரங்கின் முன்வரிசையில் இருந்த இருக்கைகளை நிறைத்திருந்தனர். இடையிடையே வாணவேடிக்கைகள் நிகழ்விடத்தை நோக்கி மக்களை ஈர்த்தவண்ணம் இருந்தன.

புத்தாண்டு வரவேற்பு நிகழ்ச்சியின் ஓரங்கமான இசைநிகழ்ச்சி ஆரம்பமாகியிருந்தது. பக்திப் பாடல்கள் காற்றலைகளில் மெல்ல வருடின. அந்த மென்மையை நுகர்ந்தவாறு சுவாமியுடன் சென்ற ஆச்சிரமக் குழுவினர் இரவு 7.45 மணிக்கு திறந்த வெளியின் முன்னரங்கை அடைந்தனர். டான் குழுமத் தலைவர் திரு. எஸ்.எஸ். குகநாதன் எழுந்துவந்து சுவாமிகள் குழுவினரை வரவேற்றார். இருக்கைகளில் இருந்த பிரமுகர்கள் சுவாமிகளைக் கண்ட மாத்திரத்தில் எழுந்து நின்று மரியாதை வழங்கினர்.

நேரம் இரவு 8மணி. டான் தொலைக்காட்சி உலகெங்கும் அந்த நிகழ்வை நேரலையாக ஒளிபரப்பிக் கொண்டிருந்தது. அறிவிப்பாளர் சுலக்சன் மேடையில் தோன்றி மங்கல விளக்கேற்றலுக்காகப் பிரமுகர்களை அழைத்தார்.

மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ ஞானமுத்து சிறீநேசன், மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் பேரவைத் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய சீனித்தம்பி யோகேஸ்வரன், ஆச்சிரம சுவாமி மட்டக்களப்பு மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் பொறுப்பதிகாரி காரியவசம், மட்டக்களப்பு மாவட்ட வர்த்தகர் சங்கத் தலைவர் செல்வராஜா, சாதனைத்தமிழன் தெரிவுக்குழுத் தலைவர் சந்திரமௌலீசன் லலீசன், டான் குழுமத் தலைவர் எஸ்.எஸ். குகநாதன், டான் தொலைக்காட்சியின் பிரதம

*எந்தச் செயல் செய்யும்போதும் திறமை என்ற ஒன்றை மட்டும் வளர்த்துக்கொள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவேற்றதிகாரி தங்கராசா சாமளன் உள்ளிட்ட பலர் மங்கலவிளக்கேற்றிச் சிறப்பித்தனர். தொடர்ந்து வரவேற்பு நடனம் சபையை ஆட்கொண்டது. அதனை அடுத்து விருதை அறிமுகம் செய்யும் உரை இடம்பெற்றது. டான் சாதனைத் தமிழன் விருதுக் குழுவின் தலைவரும் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபருமாகிய சந்திரமௌலீசன் லலீசன் இந்த உரையை மேற்கொண்டார்.

சாதனைத் தமிழன் விருது இதுவரை கலாநிதி ஆறு. திருமுருகன் (மறைந்த) அருட்தந்தை மரியசேவியர் அடிகள் பேராசிரியர் சி. மௌனகுரு, தொழில்முனைவர் முல்லை சாஜிராணி, பேராசிரியர் சி. பத்மநாதன், இசையமைப்பாளர் கண்ணன் என்ற வரிசையில் ஆன்மீகப் பணியை அர்த்தமுள்ளதாக்கி மனித சேவையே தெய்வ வழிபாடு என வாழும் கலாநிதி செ. மோகனதாஸ் சுவாமிகளுக்கு இந்த விருது வழங்கப்படுவதாகப் உத்தியோக பூர்வமாக பிரகடனப்படுத்தினார். கூடியிருந்த மக்களின் கரவொலி விண்ணை எட்டியது.

இந்த இடத்தில். திரு. லலீசனின் கம்பீரமான உரைக்குப் பின்னால் சந்நிதியான் ஆச்சிரமம் இருப்பதைச் சொல்லியே ஆக வேண்டும். 1998 இல் ஆச்சிரமத்தில் ஆன்மீகப் பேச்சாளராக மேடையேறிய லலீசன் இன்று பலரது மனங்கவர்ந்த பேச்சாளராக உலகில் உலாவருகின்றார். இன்று சாதனைத்தமிழன் விருதுத் தெரிவுக் குழுவின் ஒருவராகவும் உள்ளார்.

அவரது உரையைத் தொடர்ந்து டான் தொலைக்காட்சி குழுமத்தால் சுவாமிகளின் சேவை பற்றிய விவரணமாக அமைந்த ஆவணப்படம் காட்சிப்படுத்தப்பட்டது. அதனையடுத்து விருது வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

பிரமுகர்கள் அனைவரும் மேடையில் புடைசூழ்ந்து நிற்க மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவைத் தலைவர் சீனித்தம்பி யோகேஸ்வரன் சுவாமிகளை வணங்கி விருதைக் கையளித்தார். பாராளுமன்ற உறுப்பினர் ஞா. சிறீநேசன் பொன்னாடை போர்த்தி மாலை அணிவித்தார். தொடர்ந்து சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் சார்பில் இளைப்பாறிய அதிபர் ஆ. சிவநாதன், வங்கியாளர் த. கணேசமூர்த்தி, டாக்டர் செந்தில்குமரன், ம. ஸ்ரீகாந்தன், நான் (கைலைநாதன்) ஆசிரியர் வாகீசன் உள்ளிட்ட பலர் பொன்னாடை போர்த்தியும் மலர் மாலை அணிவித்தும் கௌரவித்தனர்.

தேவர்கள் பூத்தூவி ஆசிர்வத்தித்தது போல வானில் இருந்து அந்தத் தருணத்திற்கெனக் காத்திருந்ததைப் போல மழைத்துளிகள் ஆசிர்வதித்தன. டான் குழுமத் தலைவர் விருதுப் பணமாக ஒரு லட்சம் ரூபாவைக் கையளித்தார். மழையின் ஆசீர்வாதம் தொடர்ந்தமையால் உரைகள் மட்டுப்படுத்தப்பட்டன. தொடர்ந்து இசைநிகழ்ச்சிக்கு வழிவிட்டு விருது வழங்கும் நிகழ்வு நிறைவுற்றது.

சுவாமியும் குழுவினரும் இரவு ஒன்பது மணிக்கு அரங்கில் இருந்து விடைபெற்றனர். இதன் தொடர்ச்சியாக கடந்த 03.01.2025 வெள்ளிக்கிழமை சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையினரின் ஏற்பாட்டில் விருது பெற்ற சுவாமிகளையும் விருது வழங்கிய டான் குழுமத்தினரையும் பாராட்டிக் கௌரவித்தனர். இதில் டான் குழுமத் தலைவர் எஸ்.எஸ். குகநாதன், முகாமையாளர் இளையதம்பி செல்வச்சந்திரன், நிறைவேற்றதிகாரி ரேவதி நிர்மல்,

*விழுவதெல்லாம் எழுவதற்குத்தானே தவிர அழுவதற்கு அல்ல.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூத்த அறிவிப்பாளர் ஆர். ஜே. சுலக்சன் உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர். சுவாமிகளின் அன்பர்களான சந்நிதி அடியவர்களால் ஆச்சிரமம் நிரம்பி வழிந்தது. சண்முகவடிவேல் பாலேந்திரன் குழுவினர் மங்கல இசை வழங்கினர்.

இளை. அதிபர் ஆ. சிவநாதனின் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பேரவையினரின் வேண்டுகோளை ஏற்று அடியவர்கள் முன்னிலையில் டான் பணிப்பாளர் குகநாதன் சுவாமிகளிடம் விருதை மீளவும் கையளித்தார். அத்தருணத்தில் சுவாமிகள் சாதனையாளன் விருது வழங்கும் நிகழ்வின்போது சந்நிதியான் ஆச்சிரமம் ஆற்றும் பணிகளுக்காக டான் நிறுவனத் தலைவர் அவர்களால் கையளிக்கப்பட்ட 100,000 ரூபாயோடு ஆச்சிரம நிதியாக 50,000 ரூபா மேலதிகமாகச் சேர்த்து இவ்விடயத்தை சபையில் வீற்றிருந்த அடியவர்கள் முன்னிலையில் கூறியதோடு அந் நிதியினை டான் குழுமத் தலைவர் கையினாலேயே அம்பாறை மாவட்டம் மாணிக்கமடு கிராமத்தில் அமைந்துள்ள வில்லூன்றி விநாயகர் ஆலயத்தில் அடிப்படைத் தேவையாக அமைந்த மலசல கூடம் அமைப்பதற்காக இந்நிதியினைப் பெறுவதற்காக வந்திருந்த ஆலய நிர்வாக சபையினரிடம் கையளித்தார்கள். நாங்கள் வழங்கிய நிதியோடு மேலதிகமாக நிதியையும் சேர்த்து தனது கையாலேயே வழங்கப்பட்டது எங்குமே நடைபெறாத ஒரு விடயம் என சபையில் இருந்தவர்களிடம் கூறி தனது மகிழ்வை வெளிப்படுத்தினார். தொடர்ந்து சுவாமிகளின் அன்பர்கள் பலர் சுவாமிகள் சாதனைத் தமிழன் விருது பெற்றமையை வாழ்த்தி பொன்னாடை போர்த்தியும் மாலை அணிவித்தும் பாராட்டினர்.

சிறியவிதையாக முளைகொண்ட சந்நிதியான் ஆச்சிரமம் இன்று விருட்சமாகி நிற்கின்றது. அதன் நிழல் பலருக்கும் வாழ்வளிக்கின்றது. ஆறுதல் வழங்குகின்றது.

நாளை என்பது என்ன என்பது பற்றிய எவ்வித எதிர்பார்ப்பும் இல்லாமல் அதனை நம்மை வாழ்விக்கும் சந்நிதியானே பார்த்துக் கொள்வான் என்ற சுவாமிகளின் நம்பிக்கை ஆச்சிரமத்தை இன்னும் உறுதியான பயணப்பாதையில் வளர்த்துச் செல்கின்றது. ஆன்மீக சேவையும் அர்த்தமுள்ளதாகின்றது.

## சந்நிதி வேலனை நாடு!

*எடுப்பு*

சந்நிதி வேலனை நாடு - சிவ
மைந்தனின் புகழினைப் பாடு! (சந்நிதி...)

*தொடுப்பு*

செந்தமிழ்த் தலைவனின் வீடு - அங்கு
வந்தனை செய்திடக் கூடு! (சந்நிதி...)

*முடிப்பு*



கந்தனின் கருணையைத் தேடு - என்றும்
வந்திடும் துயரங்கள் ஓடும்!
சந்ததம் சிந்தையில் பீடு - தனைத்
தந்திடும் குகனுக்கேது ஈடு? (சந்நிதி...)



*-ப. மகேந்திரன்-*

***எதிர்காலம் உள்ளங்கை ரேகையில் இல்லை. அது உன் உள்ளத்தில் உள்ளது.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் (தொடர்ச்சி...)

| | | |
|---|---|---|
| கா. விஜயசுரேஸ் | சுவிஸ் (மழை வெள்ள நிவாரணத்திற்கான உதவி) | 320000. 00 |
| சிவா நறுமணப்பூங்கா | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| K.V. துரைசாமி நினைவாக | மயிலிட்டி | 1000. 00 |
| சி. பகீரதன் | கனடா | 5000. 00 |
| இ. சிவராஜா (இலங்கை வங்கி) | கரவெட்டி (கல்விப்பணி - மாதாந்தம்) | 15000. 00 |
| செ. கவிதா | லண்டன் (வல்வெட்டி) | 15000. 00 |
| சி. லக்ஷ்மன் | பருத்தித்துறை | 10000. 00 |
| டனாஸ் | லண்டன் | 15000. 00 |
| சுசீலா நகை மாடம் | பருத்தித்துறை | தேங்காய், 1மூடை அரிசி |
| சி. தங்கவடிவேல் (சிற்றி வெதுப்பகம்) | தும்பளை | 1மூடை மா |
| சுந்தரம் மருந்தகம் | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| த. கணேசமூர்த்தி மூலம் திருமதி க. சுஜந்தி நினைவாக | யாழ்ப்பாணம் (63 நாயன்மார்கள் குருபூசைக்காக) | 60000. 00 |
| த. சாந்தகுமார் | சங்கரத்தை | 50000. 00 |
| த. பவனேசன் | சிறுப்பிட்டி | 5000. 00 |
| பிரபுராம் ஸ்ரீமுருகன் | உடுவில் | 5000. 00 |
| செ. கார்த்திகன் | கொழும்பு | 1மூடை அரிசி |
| கந்தசாமி ஆச்சி | கரவெட்டி | 16000. 00 |
| திரு குமாரசாமி குடும்பம் | கொடிகாமம் | 7000. 00 |
| சின்னப்பு ரமேஸ் | உடுப்பிட்டி | 1மூடை அரிசி |
| நி. நிஷாந்தன் | நீர்வேலி | 1மூடை அரிசி |
| திரு சிவனொளிபாதம் குடும்பம் | சிலாபம் | 25000. 00 |
| திரு கிருபாகரன் குடும்பம் | லண்டன் | 40000. 00 |
| மா. சாம்பசிவம் | நாகர்கோவில் | 25000. 00 |
| செ. தெய்வேந்திரம் | கோண்டாவில் | 30000. 00 |
| அ. செல்லப்பா | கனடா | 5000. 00 |
| திரு லக்ஷ்மணன் குடும்பம் | கனடா | 31000. 00 |
| திரு சிவபாலன் குடும்பம் | யாழ்ப்பாணம் | 36000. 00 |
| ந. ஜெகதீசன் குடும்பம் | பிரான்ஸ் | 10000. 00 |
| P. சரவணகோபி | கொழும்பு | 1000. 00 |
| நிலா ரான்ஸ்போட் | காங்கேசந்துறை | 5000. 00 |
| க. கபில்ராஜா | காரைநகர் | 40000. 00 |

*தன்னில் தானே மகிழ்பவனை தீமையான ஆயுதங்கள் தொடுவதில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ப. சந்திரதேவா | பிரான்ஸ் | 40000. 00 |
| சந்திரப்பிரகாசம் யதுகுலன் ஆத்தியடி | பருத்தித்துறை | 10000. 00 |
| M. லோகேஸ்வரன் | கொழும்பு | 25000. 00 |
| தீபன் மதனா குடும்பம் | கலிகை | 5000. 00 |
| திரு மகாதேவன் குடும்பம் | திருநெல்வேலி | 5000. 00 |
| S. சுந்தரலிங்கம் நினைவாக (செல்வம் பற்றிக் கடை) | யாழ்ப்பாணம் | 50000. 00 |
| சா. விதியன் | அளவெட்டி | 10000. 00 |
| A. சுந்தரலிங்கம் | நாகர்கோவில் | 25000. 00 |
| இ. யோகேஸ்வரி | மானிப்பாய் | 10000. 00 |
| க. சிவனேசன் | சிறுப்பிட்டி | 1000. 00 |
| திரு சபேசன் குடும்பம் | கனடா | 10000. 00 |
| மு. மகேந்திரம் | மானிப்பாய் | 5000. 00 |
| மணியம் ஸ்ரோர்ஸ் | கோண்டாவில் | 12 பைக்கற் சோயா |
| சிங்கராசா லதா குடும்பம் | ஜேர்மன் | 50000. 00 |
| ஜெயபாலன் நதிகா குடும்பம் | பிரான்ஸ் | 5000. 00 |
| கு. நித்தியானந்தன் | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| லிங்கம் கூல்பார் | யாழ்ப்பாணம் | 50000. 00 |
| திரு தங்கராசா குடும்பம் | வட்டுக்கோட்டை | 5000. 00 |
| க. கெங்காதரன் | கொக்குவில் | 5000. 00 |
| T.M. ராஜா | சங்கானை | 1000. 00 |
| ஈ. டஸ்வின் | தாவடி | 5000. 00 |
| S.T.R. தியாகராஜா குடும்பம் | கொழும்பு | 5000. 00 |
| கேதீஸ்வரன் விஜித்தா | கொழும்பு | 5000. 00 |
| S.R. விக்னேஸ்வரன் | தெல்லிப்பழை | 1மூடை அரிசி |
| திரு ஸ்ரீபாலமோகன் குடும்பம் | கனடா | 25000. 00 |
| சுமங்கலி ஹோட்டல் | கொழும்பு | 1மூடை அரிசி |
| த. கோபிநாத் | புங்குடுதீவு | 20000. 00 |
| ந. விக்னேஸ்வரன் | கொழும்பு | 5000. 00 |
| முத்தையா ஞானவேல் | சுழிபுரம் மேற்கு | 10000. 00 |
| க. அகல்யா | இணுவில் | 10000. 00 |
| 63 நாயன்மார் குருபூசை மடம் | நல்லூர் | 2000. 00 |
| மே. நிரோத்தீபன் | அரியாலை | 5000. 00 |
| பா. அருந்தவநாதன் | சுதுமலை | 1மூடை அரிசி |
| சரவணமுத்து ஆசைப்பிள்ளை | கோண்டாவில் | 10000. 00 |
| கோ. அஸ்வினி | ஆனைக்கோட்டை | 6000. 00 |
| கோ. ஐஸ்வரியா | ஆனைக்கோட்டை | 6000. 00 |
| கோ. அக்ஷயா | ஆனைக்கோட்டை | 6000. 00 |
| கோ. யாழினி | ஆனைக்கோட்டை | 10000. 00 |

*நீ வெற்றியடைவதை உன்னைத் தவிர வேறு யாராலும் தடுக்க முடியாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| அ. வசந்தகுமார் | மானிப்பாய் | 50000. 00 |
| ச. மகிந்தன் | சிறுப்பிட்டி | 3000. 00 |
| சி. மங்கையற்கரசி | கைதடி | 5000. 00 |
| மு. மகேஸ்வரன் | கல்வியங்காடு | 10000. 00 |
| P. ஜெயசுந்தரம் | நல்லூர் | 5000. 00 |
| கார்முகி அன்புமாறன் | கனடா | 25000. 00 |
| பொ. ஜெயச்சந்திரன் | அச்சுவேலி | 5000. 00 |
| அ. கோபாலகிருஷ்ணன் | தொல்புரம் | 5000. 00 |
| பா. ஜொனி | சுவிஸ் | 3000. 00 |
| சூ. சூரியபிரகாஸ் | கரவெட்டி | 2000. 00 |
| திரு தங்கவேல் குடும்பம் | கொம்மந்தறை | 10000. 00 |
| அ. கந்தசாமி | அச்சுவேலி | 5000. 00 |
| K. கந்தசாமி | இணுவில் | 1000. 00 |
| ச. பாலசுப்பிரமணியம் குடும்பம் | லண்டன் | 5000. 00 |
| மி. ராணி | சுவிஸ்லாந்து | 2000. 00 |
| க. சஜந்தினி குடும்பம் | சுவிஸ் | 10000. 00 |
| சி. சிவச்செல்வம் | நவாலி | 1000. 00 |
| வி. கருணானந்தம் | புங்குடுதீவு | 1500. 00 |
| கி. குலசேகரம் குடும்பம் | அச்சுவேலி | 45000. 00 |
| சி. நிவேதன் | கொழும்பு | 5000. 00 |
| ஸ்ரீ. மதிவதனி | இணுவில் | 10000. 00 |
| S. தங்கமலர் | மல்லாவி | 10000. 00 |
| திரு பாவேந்தன் குடும்பம் | கனடா | 10000. 00 |
| திரு ரஜனிகாந் குடும்பம் | கனடா | 10000. 00 |
| த. யோகநாதன் | அச்சுவேலி | 5000. 00 |
| K. திலீபன் | அராலி | 1000. 00 |
| K. வில்வநாதன் | அராலி | 1000. 00 |
| ம. மதிவண்ணன் | ஏழாலை | 1000. 00 |
| திரு அருணகிரி குடும்பம் | ஜேர்மன் | 5000. 00 |
| திரு கணநாதன் குடும்பம் | ஆனைக்கோட்டை | 15000. 00 |
| S. கோசலைகோபன் | உடுப்பிட்டி (கொழும்பு) | 2000. 00 |
| செ. ரவீந்திரநாதன் | உடுப்பிட்டி | 10000. 00 |
| சி. ராசலிங்கம் நினைவாக | அச்சுவேலி | 50000. 00 |
| சந்திரலிங்கம் செல்வநாயகி நினைவாக | மயிலிட்டி | 50000. 00 |
| கோணேஸ்வரன் உதயன் | ஜேர்மன் (கிளிநொச்சி) | 50000. 00 |
| பி. வர்சாளி | நவிண்டில் | 10000. 00 |
| திரு ஸ்ரீகாந்தா குடும்பம் | உடுப்பிட்டி | 20000. 00 |
| யோ. சங்கீதா | உடுப்பிட்டி | 500. 00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| திரு தர்மரட்ணம் குடும்பம் | உடுப்பிட்டி | 5000. 00 |
| T. உஷாந்தன் | உடுப்பிட்டி | 2000. 00 |
| க. பிரதீஸ்வரன் | தாவடி | 1000. 00 |
| சி. குமரேசன் | பருத்தித்துறை | 4000. 00 |
| மு. பாரத் | இணுவில் மரக்கறி, 2புட்டி அரிசி | 10000. 00 |
| ம. மார்க்கண்டு | பரந்தன் | 5000. 00 |
| ச. விக்ரன் | வட்டுக்கோட்டை | 5000. 00 |
| சா. குருஷரன் | லண்டன் 1புட்டி அரிசி, மரக்கறி, | 15000. 00 |
| மா. தவதேவதாசன் குடும்பம் | லண்டன் | 10000. 00 |
| பொ. கோபாலகிருஷ்ணன் | திருநெல்வேலி | 10000. 00 |
| அ. பவான் | சுவிஸ் | 5000. 00 |
| வ. யோகேஸ்வரன் | அல்வாய் | 5000. 00 |
| கி. சப்தசானி | சுன்னாகம் | 5000. 00 |
| N. சப்தமி ஸ்ரீ நதியா நகை மாடம் | யாழ்ப்பாணம் | 10000. 00 |
| திரு கனகேந்திரன் குடும்பம் | வட்டுக்கோட்டை (U.K) | 2000. 00 |
| S. வல்லிபுரம் | பருத்தித்துறை | 5000. 00 |
| N. நதுஷா | உடுப்பிட்டி 3k பருப்பு, 3புட்டி அரிசி | |
| திரு நற்குணராசா | காரைநகர் | 1000. 00 |
| மோ. சற்குணதேவி | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| திரு சத்தியரூபன் | காரைநகர் | 1000. 00 |
| ச. சங்கவி | லண்டன் | 5000. 00 |
| பூ. மதுஷன் | லண்டன் | 5000. 00 |
| பூ. சேயோன் | லண்டன் | 5000. 00 |
| அ. ரிஷிகேஷன் | காரைநகர் | 1000. 00 |
| அ. கிருஷ்ணவி | காரைநகர் | 1000. 00 |
| கு. அகிலன் | யாழ்ப்பாணம் | 10000. 00 |
| அ. குமாரவேல் ஆசிரியர் | ஆனைக்கோட்டை | 10000. 00 |
| திரு பழநியாண்டவர் | மந்திகை (கல்விப் பணிக்காக) | 15000. 00 |
| தி. நேத்திரா | அச்சுவேலி | 15000. 00 |
| ஜெ. கலைவாணி | கொழும்பு | 10000. 00 |
| ரா. மகிஷா | சுவிஸ் | 2000. 00 |
| க. விஜேந்திரன் | கனடா | 5000. 00 |
| ந. சோமசுந்தரம் | புங்குடுதீவு | 1000. 00 |
| திரு ஸ்ரீசங்கர் குடும்பம் | லண்டன் | 10000. 00 |
| பா. கார்த்திகேயன் | சாவகச்சேரி | 1000. 00 |
| S. பாலகுமாரி | வவுனியா | 5000. 00 |
| திரு குமார் | கனடா | 836,000. 00 |
| திரு முரளிதரன் குடும்பம் | கல்வியங்காடு | 2000. 00 |

(தொடரும்...

நம்பிக்கை குறையும்போது ஒவ்வொரு மனிதனும் வெற்றியற்ற கொள்கையை மேற்கொள்கிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியான் ஆச்சிரமம் சமுதாயப் பணிகள் - 2024

## (03.07.2024 தொடக்கம் 30.12.2024 வரை)

*– தொகுப்பு: சந்நிதியான் ஆச்சிரமம் –*

**03.07.2024 புதன்கிழமை**

புத்தளம் - சேனைக்குடியிருப்பு, மணற்குன்று கிராமத்தைச் சேர்ந்த கண்பார்வை பாதிக்கப்பட்ட 86 பயனாளிகளிற்கு 70,000. 00 ரூபா நிதிப்பங்களிப்பில் மூக்குக் கண்ணாடிகள் சேனைக்குடியிருப்பில் வைத்து வழங்கப்பட்டது.

**12.07.2024 வெள்ளிக்கிழமை**

சாந்தை, பண்டத்தரிப்பைச் சேர்ந்த பல்கலைக்கழகத்திற்கு தெரிவான மாணவிக்கு 135,000. 00 ரூபா பெறுமதியான மடிக்கணனி வழங்கப்பட்டது.

**26.07.2024 வெள்ளிக்கிழமை**

01) ஆவரங்கால் மேற்கு, புத்தூரைச் சேர்ந்த பெண் தலைமைத்துவ குடும்பத்திற்கு கோழி வளர்ப்புக்காக 75,000. 00 ரூபா நிதி வழங்கப்பட்டது.

02) மட்டுவில் கிழக்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த பெண் தலைமைத்துவ குடும்பத்திற்கு கோழி வளர்ப்புக்காக 75,000. 00 ரூபா நிதி வழங்கப்பட்டது.

**28.07.2024 ஞாயிற்றுக்கிழமை**

01) ஒட்டுசுட்டான் பரசன்குளம் கிராம மக்களுக்கு பாவனையற்று தண்ணீர் இன்றி காணப்பட்ட பொதுக்கிணற்றை சீர்செய்து ஆழ்துளையிடும் கருவியூடாக மேலும் ஆழமாக்கி, மோட்டர், பைப் லைனிங், தண்ணீர் தாங்கி ஊடாக நாளாந்த குடிநீர் பாவனைக்கு 340,000 ரூபா நிதிச் செலவில் மக்களிடம் கையளிக்கப்பட்டது.

02) முத்துஜயன்கட்டு ஜீவநகர் முத்துமாரி அம்மன் ஆலயத்திற்கு 175,000. 00 ரூபா செலவில் மலசலகூடம் நிர்மானிக்கப்பட்டது.

**02.08.2024 வெள்ளிக்கிழமை**

யா/ உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் பாடசாலையின் உதைபந்தாட்டம் மற்றும் கரப்பந்தாட்டம் அணியினருக்கான சீருடைகள், பந்துகள் கொள்வனவு செய்வதற்காக 150,000. 00 ரூபா நிதி வழங்கப்பட்டது.

*உனது ஒவ்வொரு தவறும் உன் எதிரியை உத்தமனாக்கிவிடும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**23.08.2024 வெள்ளிக்கிழமை**

01) சிறுப்பிட்டி மேற்கு, நாகதம்பிரான் ஆலய திருவிழாவை முன்னிட்டு 500kg அரிசி, 20kg பருப்பு, மரக்கறி வகைகள் மற்றும் 50,000. 00 ரூபா நிதியும் வழங்கப்பட்டது.

02) நவிண்டில் ஞானவைரவர் அறநெறிப்பாடசாலைக்கு 05 செற் வாங்கு மேசைகள் மற்றும் 50,000. 00 ரூபா நிதியும் வழங்கப்பட்டது.

**06.09.2024 வெள்ளிக்கிழமை**

01) ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயத்திற்கு 230,000. 00 ரூபா பெறுமதியான நிழற்பிரதி இயந்திரம் வழங்கப்பட்டது.

02) வட்டுக்கோட்டை யா/ துணைவி அமெரிக்கன் மிசன் தமிழ் கலவன் பாடசாலைக்கு மாணவர்களுக்கான பரீட்சை வினாத்தாள் தேவைக்காக 51,000. 00 ரூபா பெறுமதியான எழுதுபொருட்கள் வழங்கப்பட்டன.

**12.09.2024 வியாழக்கிழமை**

நெல்லியடி மெதடிஸ்த மிசன் தமிழ் கலவன் பாடசாலைக்கு 550,000. 00 ரூபா நிதிப்பங்களிப்பில் குடிநீர் சுத்திரிப்பு இயந்திரம் பொறுத்தப்பட்டது.

**13.09.2024 வெள்ளிக்கிழமை**

01) யா/ அளவெட்டி அருணாசலம் வித்தியாலய மாணவர்களின் பரீட்சை தேவைக்காக 15,000. 00 ரூபா பெறுமதியான எழுதுபொருட்கள் வழங்கப்பட்டது.

02) உடையார்கட்டு முல்லை இசைக் கலாலயத்திற்கு பிள்ளையார் சிலை அமைப்பதற்காக 25,000. 00 ரூபா நிதி வழங்கப்பட்டது.

03) மலரும் மூளாய் அபிவிருத்தி அமையத்திற்கு மூளாய் பிரதேச மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக 500kg அரிசி வழங்கப்பட்டது.

04) மலையகம் பண்டாரவளை ப/ சௌதம் தமிழ் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த A. ஆனந்தகிருஷாந்தி என்பவரின் மேற்படிப்புக்கு 50,000. 00 ரூபா நிதி வழங்கப்பட்டது.

05) யாழ் பல்கலைக்கழக விளையாட்டுத் துறையின் மகளிர் கரப்பந்தாட்ட அணியினருக்கு சீருடை வழங்குவதற்காக 40,000. 00 ரூபா நிதி வழங்கப்பட்டது.

**15.09.2024 ஞாயிற்றுக்கிழமை**

வவுனியா கணேசபுரம் திருமூலர் அறநெறிப் பாடசாலைக்கான புதிய கட்டிடம் 02 மில்லியன் நிதிப்பங்களிப்பில் அமைத்துக் கொடுக்கப்பட்டது.

**16.09.2024 திங்கட்கிழமை**

முல்லைத்தீவு, கேப்பாப்பிளவு கிராமத்தைச் சேர்ந்த விழுப்புண் அடைந்த முன்னால் போராளிக்கு சுயதொழில் மேற்கொள்வதற்காக 66,000. 00 ரூபா பெறுமதியில் கடற்றொழில் மீன்பிடி வலைகள் வழங்கப்பட்டன.

*முதல் தவறு, இரண்டாவது தவறுக்கு இருக்கையைத் தயார் செய்கிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**20.09.2024 வெள்ளிக்கிழமை**

04 மாணவர்களுக்கு 172,000. 00 ரூபா பெறுமதியான துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன.

01) யா/ வடமராட்சி மத்திய கல்லூரி உயர்தர மாணவி

02) யா/ மகாஜனக் கல்லூரி தரம் 08 மாணவி

03) நீர்வேலி தெற்கைச் சேர்ந்த புலமைப் பரீட்சையில் சித்தியடைந்த 02 மாணவிகள்

**25.09.2024 புதன்கிழமை**

திருகோணமலை, பெரியகடை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தின் கட்டிடப் பணிக்காக 100,000. 00 ரூபா நிதி நேரடியாகச் சென்று வழங்கப்பட்டது.

**27.09.2024 வெள்ளிக்கிழமை**

01) யா/ பொற்பதி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலைக்கு 230,000 ரூபா பெறுமதியான நிழற்பிரதி இயந்திரம் வழங்கப்பட்டது.

02) புலோலி, தென்மேற்கு மூத்தோர் சங்கத்தினருக்கு 60,000. 00 ரூபா பெறுமதியான 30 புட்டி அரிசியும் 25,000. 00 ரூபா நிதியும் வழங்கப்பட்டன.

03) வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் யாழ் மாவட்ட அலுவலகத்தினருக்கு மூத்தோர் தினத்தை முன்னிட்டு 50,000. 00 ரூபா பெறுமதியான 25 சாரம், 25 சேலைகள் வழங்கப்பட்டன.

04) முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்டு வரும் விநாயகர் ஆலய கட்டிடப் பணிக்காக 500,000. 00 ரூபா நிதி வழங்கப்பட்டது.

**04.10.2024 வெள்ளிக்கிழமை**

01) யா/ அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயத்தினருக்கு நவராத்திரி போட்டிக்கான பரிசில்கள் வழங்குவதற்காக 20,000. 00 ரூபா நிதி வழங்கப்பட்டது.

02) யாழ் பல்கலைக்கழக வரலாற்றுத்துறையினர் கலாசார ஆய்வுக்காக 50,000 ரூபா நிதி வழங்கப்பட்டது.

03) 150,000. 00 ரூபா பெறுமதியான 03 துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன.

முு/ வற்றாப்பளை மகா வித்தியாலயம் - தரம் 09 மாணவி

மு/ முள்ளியவளை கலைமகள் வித்தியாலயம் - தரம் 08 மாணவி

யா/ அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயம் - தரம் 07 மாணவி

**06.10.2024 ஞாயிற்றுக்கிழமை**

01) தொண்டைமானாற்றைச் சூழவுள்ள 70 ஆண், பெண் முதியோர்களுக்கு மூத்தோர் தினத்தை முன்னிட்டு சாரம், சேலைகள் என்பன வழங்கப்பட்டது.

02) பளை, தர்மக்கேணி அரசினர் தமிழ் கலவன் பாடசாலைக்கு 180,000. 00 ரூபா பெறுமதியான 02 கணினிகள் வழங்கப்பட்டன.

*அறிவும் ஒழுக்கமும் வண்டியின் இரு சக்கரங்கள் மாதிரி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**08.10.2024 செவ்வாய்க்கிழமை**

01) மலையகம் பண்டாரவளை அயிஸ்லெபி தமிழ் வித்தியாலய மாணவர்கள் தேசியமட்ட நாடகப் போட்டியில் கலந்துகொள்வதற்கான செலவுக்காக 50,000. 00 ரூபா நிதி வழங்கப்பட்டது.

02) மலையகம் பண்டாரவளை சௌதம் தமிழ் மகா வித்தியாலய வாணி விழா அன்னதான நிகழ்வுக்காக 125,000. 00 ரூபா நிதி வழங்கப்பட்டது.

03) நெடுங்கேணி பெரியகுளம் பிள்ளையார் ஆலய கட்டிட கட்டுமானப் பணிக்கு 100,000. 00 ரூபா நிதி வழங்கப்பட்டது.

04) கிளிநொச்சி சாந்தபுரம் கிராமத்தில் தெரிவுசெய்யப்பட்ட 30 குடும்பங்களுக்கு 110,000. 00 ரூபா பெறுமதியான அத்தியாவசியமான உணவுப்பொருட்கள் வழங்கப்பட்டன.

**10.10.2024 வியாழக்கிழமை**

கிளிநொச்சி கோணாவில் கிழக்கு பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டு சிறுநீரகமும் பாதிக்கப்பட்ட குடும்பம் ஒன்றிற்கு வாழ்வாதார உதவியாக 260,000. 00 ரூபா பெறுமதியான ஆழ்துளைக் கிணறு அமைத்துக் கொடுக்கப்பட்டது.

**11.10.2024 வெள்ளிக்கிழமை**

96,800. 00 ரூபா பெறுமதியான 02 துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன.

யா/ அச்சுவேலி மத்திய கல்லூரி - தரம் 07 மாணவி

யா/ நல்லூர் சி.சி.த.க பாடசாலை - தரம் 07 மாணவி

**16.10.2024 புதன்கிழமை**

01) புத்தளம் சென் மேரிஸ் தமிழ் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் பல்இன மதங்களைச் சார்ந்த தரம் 01 தொடக்கம் தரம் 05 வரையான 175 மாணவர்களுக்கு 74,000. 00 ரூபா பெறுமதியான உணவுப் பெட்டிகள் வழங்கப்பட்டன.

02) புத்தளம் சேனைக்குடியிருப்பு, மணல்குன்று, அபயபுர பிரதேசங்களில் வாழும் பல்இன சமூகங்களைச் சார்ந்த 63 மாணவர்களுக்கு 136,000. 00 ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

**18.10.2024 வெள்ளிக்கிழமை**

வடமராட்சி பருத்தித்துறை, கரவெட்டி பிரதேச செயலகங்களின் கோரிக்கைக்கு அமைவாக முதியோர் தினத்தை முன்னிட்டு 87,500. 00 ரூபா பெறுமதியான 35 பெட்சீற், 35 சீலை என்பன வழங்கப்பட்டன.

**01.11.2024 வெள்ளிக்கிழமை**

01) பருத்தித்துறை பிரதேச செயலகத்தினரின் கோரிக்கைக்கு அமைவாக வீட்டுத் தோட்ட பயிர்ச் செய்கைக்காக 200 பயனாளிகளுக்கு தேவையான விவசாய உள்ளீடு களிற்காக 40,000. 00 ரூபா நிதி அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் வழங்கப்பட்டது.

*நேரத்தைக் கண்ணினும் பொன்னினும் மேலாக மதி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02) பண்டாரவளை ப/ கிரேக் தமிழ் மகா வித்தியாலயத்திற்கு 58,000. 00 ரூபா பெறுமதியான அச்சு இயந்திரம் வழங்கப்பட்டது.

**06.11.2024 புதன்கிழமை**

கந்தசஷ்டி விரத காலத்தை முன்னிட்டு (02.11.2024 தொடக்கம் 06.11.2024வரை) விரதம் அனுஷ்டிக்கும் அடியவர்களுக்கு 02 மில்லியன் நிதிச் செலவில் பழவகைகள் வழங்கப்பட்டன.

**08.11.2024 வெள்ளிக்கிழமை**

01) ஆனைக்கோட்டை இந்து சமய அபிவிருத்தி சங்கத்தால் நடாத்தப்பட்ட விழாவுக்காக மாணவர்களுக்கு பரிசுப் பொருட்கள் வழங்குவதற்காக 42,000. 00 ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டது.

02) யா/ அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயத்திற்கு 15,000. 00 ரூபா பெறுமதியான பெறுமதிமிக்க நூல்கள் வழங்கப்பட்டன.

**11.11.2024 திங்கட்கிழமை**

முல்லைத்தீவு அம்பகாமம் கிராம மக்களின் குடிநீர் பயன்பாட்டிற்காக 788,000 ரூபா பெறுமதியான குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் பொருத்தப்பட்டது.

**19.11.2024 செவ்வாய்க்கிழமை**

01) வவுனியா வடக்கு பிரதேச செயலக கோரிக்கைக்கு அமைவாக பாடசாலை வரவொழுங்கற்ற பிள்ளைகளின் வரவொழுங்கை மேம்படுத்தும் நோக்கில் போக்குவரத்து வசதியை இலகுபடுத்துவதற்காக 85,650. 00 ரூபா கார்த்திகை மாத நிதி வழங்கப்பட்டது.

02) வவுனியா கல்மடு பூம்புகார் கண்ணகி வித்தியாலயத்திற்கு மூத்தோர் தின நிகழ்வுக்காக 170,000. 00 ரூபா பெறுமதியான ஆடைகளான சேட், சாறி, சாரம் மற்றும் 30,000. 00 ரூபா நிதியும் வழங்கப்பட்டன.

**23.11.2024 சனிக்கிழமை**

01) யாழ்ப்பாணம் கல்லுண்டாய் புதிய குடியிருப்பு பகுதியில் தெரிவு செய்யப்பட்ட 59 குடும்பங்களுக்கு 295,000. 00 ரூபா பெறுமதியான அத்தியாவசியமான உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

02) யா/ கொட்டடி நமச்சிவாய வித்தியாலயத்தில் தரம் 07இல் கல்வி கற்கும் மாணவனுக்கு 45,000. 00 ரூபா பெறுமதியான துவிச்சக்கரவண்டி வழங்கப்பட்டது.

**25.11.2024 திங்கட்கிழமை**

யாழ்ப்பாணம் நல்லூர் சங்கிலியன் தோப்பு பகுதியில் தெரிவுசெய்யப்பட்ட 78 குடும்பங்களுக்கு 390,000. 00 ரூபா பெறுமதியான அத்தியாவசியமான உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

*நம் எதிர்காலத்தை நாமே உருவாக்குகிறோம். அதை விதி என்கிறோம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**28.11.2024 வியாழக்கிழமை**

யாழ்ப்பாணம் அராலி கிழக்கு, அராலி மத்தி ஆகிய பகுதிகளில் 57 குடும்பங்களைத் தெரிவுசெய்து 285,000. 00 ரூபா பெறுமதியான அத்தியாவசியமான உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

**04.12.2024 புதன்கிழமை**

01) முல்லைத்தீவு பழம்பாசி, கரடிப்பிலவு, 17ஆம் கட்டை, மாமடுச்சந்தி பெரிய இத்திமடு, தட்டாமலை, தண்டுவான் பிரதேசங்களில் உள்ள 65 குடும்பங்களைத் தெரிவு செய்து 325,000. 00 ரூபா பெறுமதியாக உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

02) பருத்தித்துறை பிரதேச செயலக கோரிக்கைக்கு அமைவாக 50 மாற்றுத் திறனாளிகள் குடும்பத்திற்கு 125,000. 00 ரூபா பெறுமதியான அத்தியாவசியமான உணவுப் பொருட்கள் பிரதேச செயலக உத்தியோகத்தரிடம் கையளிக்கப்பட்டன.

**05.12.2024 வியாழக்கிழமை**

யாழ்ப்பாணம் கந்தரோடை இக்கிரானை கிராமத்தில் தெரிவு செய்யப்பட்ட 75 குடும்பங்களுக்கு 375,000. 00 ரூபா பெறுமதியான அத்தியாவசியமான உணவுப்பொருட்கள் வழங்கப்பட்டன.

**06.12.2024 வெள்ளிக்கிழமை**

01) யாழ்ப்பாணம் செல்லர் வீதி நல்லூரைச் சேர்ந்த ஸ்ரீ யமுனாம்பிகா சமேத சிவ சங்கரனார் திருக்கோவில் (பூதவராயர்) கட்டிடப் பணிக்காக 200,000. 00 ரூபா நிதி வழங்கப்பட்டது.

02) மல்லாகம் தெற்கு கிராம அபிவிருத்தி சங்கத்திற்கு 01 பரல் குளோரின் வழங்கப்பட்டது.

**08.12.2024 ஞாயிற்றுக்கிழமை**

திருகோணமலை 10ஆம் கட்டை வேப்பங்குளம் பகுதியைச் சேர்ந்த பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த குடும்பம் ஒன்றிற்கு வீட்டு கூரை வேலைக்காக 100,000. 00 ரூபா நிதி வழங்கப்பட்டது.

**11.12.2024 புதன்கிழமை**

முல்லைத்தீவு வற்றாப்பளை, முள்ளியவளை, கேப்பாப்பிலவு, ஐயனார் குடியிருப்பு, ரெட்பானா, விசுவமடு பிரதேசங்களைச் சேர்ந்த 165 குடும்பங்களுக்கு 495,000. 00 ரூபா பெறுமதியான அத்தியாவசிய உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

**13.12.2024 வெள்ளிக்கிழமை**

01) 145,200. 00 ரூபா பெறுமதியான 03 துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன.

கம்பர்மலை வித்தியாலயம் தரம் 06 மாணவி

தெல்லிப்பளை யூனியன் கல்லூரி தரம் 07 மாணவி

அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயம் தரம் 08 மாணவி

*முட்டாளைச் சமாளிக்க சுருக்கமான வழி, மௌனமாக இருப்பதுதான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02) மலையகம் - பண்டாரவளை பகுதியைச் சேர்ந்த குடும்பம் ஒன்றிற்கு வீடு திருத்தம் செலவுக்காக 100,000. 00 ரூபா நிதி வழங்கப்பட்டது.

03) மலையகம் - பண்டாரவளை பகுதியைச் சேர்ந்த குடும்பம் ஒன்றிற்கு மருத்துவ செலவுக்காக 100,000. 00 ரூபா நிதி வழங்கப்பட்டது.

**15.12.2024 ஞாயிற்றுக்கிழமை**

வவுனியா வெங்கல செட்டிக்குளம் ஞானப் பிள்ளையார் அறநெறிப் பாடசாலை 67 மாணவர்களுக்கு 100,500. 00 ரூபா பெறுமதியான சீருடைகள் வழங்கப்பட்டன.

**17.12.2024 செவ்வாய்க்கிழமை**

யாழ்ப்பாணம் - மல்லாகம், குளமங்கால் கிராமத்தில் தெரிவுசெய்யப்பட்ட 40 குடும்பங்களுக்கு 200,000. 00 ரூபா பெறுமதியான அத்தியாவசியமான உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

**18.12.2024 புதன்கிழமை**

இயற்கைப் பேரிடரால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு நெடுங்கேணி, கரடிப்பிலவு கிராமத்தில் தெரிவுசெய்யப்பட்ட 56 குடும்பங்களுக்கு 280,000. 00 ரூபா பெறுமதியான அத்தியாவசியமான உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

**19.12.2024 வியாழக்கிழமை**

இயற்கை பேரிடரால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி பூநகரி பிரதேசத்தில் உள்ள தெளிகரை, செம்பன்குன்று கிராமங்களில் தெரிவு செய்யப்பட்ட 75 குடும்பங்களுக்கு 375,000. 00 ரூபா பெறுமதியான அத்தியாவசியமான உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

**22.12.2024 ஞாயிற்றுக்கிழமை**

இயற்கைப் பேரிடரால் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணம் உரும்பராய் தெற்கில் தெரிவு செய்யப்பட்ட 157 குடும்பங்களுக்கு 785,000. 00 ரூபா பெறுமதியான அத்தியாவசியமான உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

**23.12.2024 திங்கட்கிழமை**

இயற்கைப் பேரிடரால் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணம் - சண்டிலிப்பாய் மத்தி பிரதேசத்தில் தெரிவுசெய்யப்பட்ட 48 குடும்பங்களுக்கு 240,000. 00 ரூபா பெறுமதியான அத்தியாவசியமான உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

**24.12.2024 செவ்வாய்க்கிழமை**

வவுனியா ஆசிக்குளம் கிராமத்தில் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட குடும்பம் ஒன்றிற்கு மருத்துவச் செலவுக்காக 40,000. 00 ரூபா நிதி சந்நிதியான் ஆச்சிரமத்தில் வைத்து வழங்கப்பட்டது.

**27.12.2024 வெள்ளிக்கிழமை**

03 மாணவர்களுக்கு 145,500. 00 ரூபா பெறுமதியான துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன.

*ஆசையும் ஏக்கமும் செல்வத்தைத் தராது. உழைப்பே செல்வத்தைத் தரும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யா/ மத்திய கல்லூரி தரம் 11 மாணவன்
யா/ சென்றோ ரோக்கா வித்தியாலயம் தரம் 08 மாணவன்
யா/ கொட்டடி நமசிவாயம் வித்தியாலயம் தரம் 08 மாணவன்

**30.12.2024 திங்கட்கிழமை**

பதுளை - வேவெஸ்ஸ, 03ஆவது மைல் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய புனருத்தாரணம் மேற்கொள்வதற்கு 01ஆம் கட்டமாக 200,000. 00 ரூபா நிதி மலையக சிறுவர் இல்லத்தில் வைத்து நிர்வாக சபையினிடம் வழங்கப்பட்டது.

பருத்தித்துறை, யா/ வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் வறுமைக்கோட்டின்கீழ் கல்வி கற்கின்ற தெரிவு செய்யப்பட்ட 35 மாணவர்களுக்கு மாதாந்தம் 100,000. 00 ரூபா நிதிப் பங்களிப்பில் காலை உணவு நாளாந்தம் வழங்கப்படுகின்றது.



*அன்னக் கந்த னடியில்*
*அழகாய்ப் பணியைச் செய்கின்ற*
*அன்பு நிறைந்த ஐயா*
*அணைத்து நிற்பார் அடியாரை*
*கன்னிப் பெண்கள் கூட*
*களித்து நிற்பர் மடந்தனிலே*
*மன்ன னிவரே என்று*
*மனத்தால் நன்றி சொல்கின்றோம்.*

*பசித்தோர் வயிறு குளிர*
*பண்பாய் இட்டு மகிழ்வாரே*
*நசிந்து வரிசை காத்து*
*நயந்தே உண்ப ரடியவர்கள்*
*புசிக்கும் காட்சி கண்டு*
*புளகாங் கிதமே அடைந்திடுவார்*
*மதியால் தொண்டின் மேன்மை*
*மகேசன் பாதம் அமர்கிறதே.*

*பவள விழாவின் வேந்தன்*
*பசுமை காண்பார் பசிபோக்கி*
*துவளும் நிலையில் கூடத்*
*துய்ய ராக வாழ்கின்றார்*
*கவளச் சோற்றை யுண்ணக்*
*கடந்து செல்வர் நெடுந்தூரம்*
*உவகை மிகவே நானும்*
*உள்ளந் திறந்து வாழ்த்துகின்றேன்.*

*-உடுவிலூர்க்கலா-*

*மனிதனின் இயற்கையான குணம் சிறப்பாக சிந்திப்பதாகும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படங்கள் தரும் பதிவுகள்




சந்நிதியான் ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்படும் சமுதாயப் பணிகளின் வரிசையில், வவுனியா மாவட்டம் ஆசிக் குளத்தைச் சேர்ந்த புற்றுநோயால் பாதிக்கப் பட்ட குடும்பம் ஒன்றிற்கு 40,000 ரூபா நிதி வழங்கப்பட்டது.

பதுளை - வேவெஸ்ஸ, 03ஆவது மைல் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய புனருத்தாரனம் மேற் கொள்வதற்கு 01ஆம் கட்ட நிதியாக 200,000 ரூபா நிதி மலையக சிறுவர் இல்லத்தில் வைத்து ஆலய நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஞானச்சுடர் மார்கழி மாத மலருக்குரிய வெளியீட்டுரை, மதிப்பீட்டுரை ஆற்றியவர்களுடன் சிறப்புப்பிரதி பெற்ற அன்பர்கள்



பணமிருந்தால் உன்னை உனக்குத் தெரியாது. பணமில்லாவிட்டால் யாருக்கும் உன்னைத் தெரியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வட்டுக்கோட்டை, வட்டு. தெற்கு இளம் நிலா விளையாட்டுக்கழகத்தின் கோரிக்கைக்கு அமைவாக மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்குவதற்காக 35,000 ரூபா நிதியும், பூநகரி, தெளிகரை பிரதேசத்தைச் சேர்ந்த பூநகரி மகா வித்தியாலயத்தில் தரம் 11இல் கல்வி கற்கும் மாணவிக்கு துவிச்சக்கரவண்டியும் வழங்கப்பட்டது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருகோணமலை - மூதூர் 02, பாலநகர் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய கட்டிடப் பணிக்காக 100,000 ரூபா நிதியும், திருகோணமலை செல்வநாயகபுரம் உதயபுரி சுவாமி தந்திரதேவா குன்றம் ஸ்ரீ லிங்கேஸ்வரர் ஆலய கட்டிட கட்டுமானப் பணிக்காக 01ஆம் கட்ட நிதியாக 200,000 ரூபா நிதியும் வழங்கப்பட்டது.



தன் துன்பத்திலும் பிறர் நலனை நினைப்பவரே நல்லோர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முல்லைத்தீவு - நெடுங்கேணி, மாமடுத்சந்தி வெள்ளைப் பிள்ளையார் ஆலய கற்பகா அறநெறிப் பாடசாலைக்கு ஏற்கனவே அமைக்கப்பட்ட கட்டிடத்தில் இரு பக்க கொட்டகைகள் புதிதாக 950,000 ரூபா பெறுமதியில் அமைக்கப்பட்டு அறநெறிப் பாடசாலை நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தினரின் கோரிக்கைக்கு அமைவாக 320 விழிப்புலனற்ற குடும்பங்களுக்கு 500,000 ரூபா பெறுமதியில் பொங்கலுக்கான அரிசி வழங்கப்பட்டது.


வவுனியா - கணேசபுரம் ஸ்ரீ சித்தி விநாயகர் அறநெறிப் பாடசாலையில் கல்வி கற்கின்ற மாணவர்களின் 42 குடும்பங்களுக்கும், வவுனியா - கோயில் புளியங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் அறநெறிப் பாடசாலையில் கல்வி கற்கின்ற மாணவர்களின் 43 குடும்பங்களுக்கும் 325,000 ரூபா பெறுமதியான பொங்கல் பொதிகள் வழங்கப்பட்டன.




மனிதர்களுக்கு எந்தப் பொருளின் மதிப்பும் அது இல்லாதபோதுதான் தெரியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆன்மீக, சமூகப் பணிகளுக்காக கரவெட்டியைச் சேர்ந்த திரு நாகேந்திரராஜா அவர்களுக்கும், புத்தூர், நவக்கிரியைச் சேர்ந்த பெண் தலைமைத்துவக் குடும்பம் ஒன்றிற்கும் வாழ்வாதார தேவை கருதியும் துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன.



தேடிப் பெறவேண்டியது புகழ். நாடி வரவேண்டியது மரியாதை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாண பல்கலைக்கழக வலிகாமம் மாணவர் ஒன்றியத்தினால் கீரிமலை சிவாலயத்தில் இடம்பெறவுள்ள கலாசாரத்துடன் ஒன்றிணைந்த பொங்கல் விழா நிகழ்வுக்காக 25,000 ரூபா நிதியும், யாழ்ப்பாணம் - பழைய மாணவ சிப்பாய்கள் அமைப்பின் கோரிக்கைக்கு அமைவாக நெடுந்தீவு பிரதேசத்தில் உள்ள 150 மாணவர்களுக்கு பயிற்சிப்பட்டறை நடாத்துவதற்காக உணவுச் செலவுக்காக 75,000 ரூபா நிதியும் வழங்கப்பட்டது.



துணிந்தவர் தோற்றதில்லை. தயங்கியவர் வென்றதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சந்நிதியான் ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்படும் சமுதாயப் பணிகளின் வரிசையில், மட்டக் களப்பு, கொக்கட்டிச்சோலை பிரதேசத்தைச் சேர்ந்த பல்கலைக் கழக சட்டத்துறை மாணவிக்கு மடிக்கணினி வழங்கப்பட்டது.

வவுனியா - கனகராஜன்குளம், பெரியகுளம் பிரதேசத்தைச் சேர்ந்த இரு சிறுநீரகங்களும் பாதிக்கப்பட்ட குடும்பம் ஒன்றிற்கு மருத்துவச் செலவுக்காக 40,000 ரூபா நிதி வழங்கப்பட்டது.





வவுனியா - கனகராஜன்குளம், பெரியகுளம் பிரதேசத்தைச் சேர்ந்த விசேட தேவைக்குட்பட்ட குடும்பம் ஒன்றிற்கு மருத்துவச் செலவுக்காக 30,000 ரூபா நிதி வழங்கப்பட்டது.


வெற்றி என்பது நிரந்தரமல்ல. தோல்வி என்பது இறுதியானதுமல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சங்கானை பிரதேச செயலக பிரிவான அராலி மத்தி, அராலி தெற்கு பகுதிகளைச் சேர்ந்த பொருளாதாரத்தால் பாதிக்கப்பட்ட 29 குடும்பங்களைத் தெரிவுசெய்து 116,000 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள் டான் ஊடகத்தின் கோரிக்கைக்கு அமைவாக உதவும் கரங்கள் செயற்றிட்டத்தின் ஊடாக வழங்கப்பட்டது.



ஒருவர் துன்பப்படும்போது நிபந்தனை ஏதுமின்றி உதவுவதுதான் நட்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புகழைக் கற்றார் கரையேறுவார்

-திரு துரை. கணேசமூர்த்தி அவர்கள்-

**(திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளின் விளக்க உரைகளிலிருந்து தொகுப்பாக்கம் செய்யப்பெற்றது)**

"அருணகிரி யீந்தளித்த திருப்புக முமிர்த மிதை
திரு முருக கிருபானந்த சுவாமி யுரைத்த விதம்
கருத் துறத் தொகுத் தியம்பும் வகை செய
அருந் திற லீவா யெம் மாணிக்கப் பிள்ளாய்"

"குருப் புகழை மேவுகின்ற கொற்றவன் றாள் போற்றுந்
திருப் புகழைக் கேளீர் தினம்"

திருப்புகழைக் கற்றார் கரையேறுவார் என்கின்ற இந்தத் தொடரினை எழுதுவதற்கு முன்னதாக இத் திருப்புகழை இவ்வுலகுக்களித்த பேரருட்செல்வர் அருணகிரிநாதர் பற்றியும், அவர் எங்ஙனம் இத்துணை பக்திப் பேராற்றலை முருகப்பெருமானிடமிருந்து பெற்றுக் கொண்டார் என்பதுமான அறிமுகமொன்றை முன்வைத்துச் செல்வது சிறப்பானதாக அமையும். அத்துடன் இத் திருப்புகழுக்கு விளக்கவுரை அருளிச் செய்த வாரியார் சுவாமிகளின் முருகானுபவங்களையும் ஓரளவேனும் இயம்பிச் செல்வது சாலப் பொருந்துவதாக அமையும்.

## அருணகிரிநாதர்

முதற்கண் அருணகிரியாரின் வரலாற்றை நோக்குமிடத்து இற்றைக்கு ஐநூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்பு சைவத்தமிழ் உலகோர் செய்த தவப்பயனாக இவர் இவ்வுலகின்கண் அவதாரஞ் செய்தமையும் அதன் பேறாகத் திருமுருகனால் ஆட்கொள்ளப்பட்டுபல பாடல்களை இயற்றி வைத்தமையும் அவை இன்றுவரை தளராத பக்தி வலுவோடு பயன்பாட்டில் இருந்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும். ஆயினும் இவர் தனது இளமைப் பருவத்தில் இவ்வுலகின் பாற்பட்ட ஆசாபாசங்களில் அல்லற்பட்டு உடலும் உள்ளமும் நொந்து ஈற்றிலே இறைவன் முருகனால் ஆட்கொள்ளப்பட்டார். இவ்வாறு ஆட்கொள்ளப்பட்டமையானது அருணகிரியார் தனது வாழ்க்கையை முடித்துக்கொள்ள முற்பட்ட அந்தக் கடைசித் தருணத்தில் நிகழ்ந்த ஒரு சம்பவமாகும்.

திருவண்ணாமலை உச்சியிலுள்ள வல்லாள மன்னன் கோபுரத்திலிருந்து உயிர் துறக்கும் பொருட்டு வீழ்வதும் அத் தருணம் அக் கோபுரத்து வட திசையில் கோயில் கொண்டிருந்த முருகப்பெருமான் குருவுருவிற் தோன்றி அவரைத் தனது செங்கரத்தாற் தாங்கி "சும்மா இரு சொல்லற" என்ற மௌன மறையை உபதேசித்து அருளியமையும் அருணகிரியாரின் உள்ளத்தில் பேரருட் பிரவாகத்தைக் கொடுத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகு பெரு வரத்தை பேரருட் கொடையாகப் பெற்ற அருணகிரியார் பலகாலம் தவநெறியிற் கூடியிருந்து சித்தி பெற்றார். இவ்வாறு வாழ்ந்து வருங்காலத்தில் ஒருநாள் மூவருந் தேவருங் காணவொண்ணாத அந்த முருகப்பெருமானே பச்சை மயிலில் அவர் முன் தோன்றி, "அருணகிரி நம் திருப்புகழைப் பாடு" என்று பணித்தருளினார். வேதாகமங்கட்கும் எட்டாத நின் திருப்புகழை கல்வி, கேள்வி சிறிதுமில்லாத சிறியேன் எங்ஙனம் பாடுவேன் என்று வினவியவிடத்து, முருகப்பெருமான் அவருடைய நாவில் வேலின் அடியால் பிரணவத்தை எழுதி "முத்தி" என்று தொடங்கிப் பாடு... என்று பணித்தருளி சகல கலா ஞானங்களையும் வழங்கி அருளினார். இவ்வண்ணம் முருகப்பெருமானது அருட்திறத்தினூடாக மடை திறந்த வெள்ளம் பாய்ந்தோடுவதுபோல பதினாறாயிரம் திருப்புகழை அருணகிரிநாதர் பாடியருளினார். இத் திருப்புகழ் ஒவ்வொன்றும் அதனை கற்பவர்க்கும் கேட்பவர்க்கும் தீராப் பிணி தீர்க்கும் அருமருந்தாக அமைந்திருப்பதுடன் பிறவிப் பெருங்கடலினின்றும் கரைசேர்க்கும் கருவியாகவும் அமைந்திருக்கிறது. பேரருட்திறம் பெற்றுப் பாடிய இத் திருப்புகழோடு திருவகுப்பு, கந்தர் அந்தாதி, கந்தர் அலங்காரம், கந்தர் அனுபூதி, வேல் விருத்தம், மயில் விருத்தம், சேவல் விருத்தம் ஆகியவற்றையும் முருகப்பெருமான்மீது அருணகிரிநாதர் பாடியருளினார். இவ்வண்ணம் திருமுருகன் ஒருவனையே பாடும் நியமங்கொண்டு பரமபதிவிரத நிலையிதுவே என உலகுக்கு உணர்த்திய பரமகுருநாதரே அருணகிரிநாதர் ஆவார்.

சிவயோக நெறியில் பெருஞ்சித்தி பெற்றும், நாதா... என்று அந்த முருகப்பெருமானால் அழைக்கப்பெற்றவரும் இவரேயாவார். இவ்வண்ணம் ஞானகுருவாகிய முருகப்பெருமானையே தனக்கு ஞான குருவாக்கிய பெருந்திறம் படைத்து அந்தக் குருமுதல்வனை பலவாறும் பாடிவருந் தருணத்தில் சம்பந்தாண்டான் என்பவனுடன் வாது செய்ய வேண்டி நேர்ந்தவிடத்து திருவருணைத்தலத்து சிவகங்கை அருகிலுள்ள மண்டபத்தின் தூணிலிருந்து முருகப் பெருமானை வருவித்து காட்சி தரச் செய்தார். இவ்வாறு திருத்தணிகையிலும் திருநடன தரிசனம் பெற்றார். இதன்பின் தமிழகத்தின் வடக்கே சரஸ்வதி நதி பாயும் வயிரவிவனம் முதலிய திருத்தலங்கள் வரையும் சென்று பாடியருளியதோடு காசி முதலிய திருத்தலங் களிலும் திருப்புகழ் பாடினார். எமது ஈழமணித் திருநாட்டின் திருகோணமலை, கதிர்காமம், யாழ்ப்பாணத்து நல்லூர், பொலிகண்டி கந்தவனம் ஆகிய தலங்களிலும் இவர் திருப்புகழ் பாடிவைத்தமையானது குறிப்பிடத்தக்கதாகும்.

அக்காலத்தில் மன்னவன் பிரபுடதேவராசனுடைய கண்ஒளி குன்றிய காரணத்தினால் அருணகிரிநாதரை விண்மலராகிய பாரிஜாத மலரைக் கொணருமாறு வேண்டியபோது சுவாமிகள் திருவருணையின் மேற்புறமுள்ள பேய்க் கோபுரத்தில் தமது திருமேனியை வைத்து கிளியுருவங்கொண்டு விண்ணுலகஞ் சென்று அப் பாரிஜாத மலரைக் கொணர்ந்தார். சுவாமிகள் இவ்விதம் கிளியுருவுடன் வந்து அமர்ந்த கோபுரத்தை இன்றும் கிளிக் கோபுரமென்றே திருவண்ணாமலையில் கூறுவர். இவ்வாறு பிரபுடதேவ மன்னனுக்கும் அங்குள்ள ஏனைய கண்ணொளி குன்றியோர்க்கும் அம் மலரின் வாசனையால் கண்ணொளி பெற்றுத் தேறியதாக

*உன் வாழ்க்கையை நீ உண்மையாகவே நேசி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறப்படுகிறது. இத் தருணத்திலே அருணகிரியார் கிளியுருவில் கந்தரநுபூதி பாடி எல்லோரையும் பரவசப்படுத்தினார்கள்.

இச் சந்தர்ப்பத்தில் சுவாமிகள்மீது பொறாமை கொண்டிருந்த சம்பந்தாண்டான் அவருடைய திருமேனியை அருணாசலேசுவரருக்கு மேற்குப் புறத்தில் புதைத்து விட்டான். பின்னர் அருணகிரிநாதர் தனது பழைய உருவத்தைக் காட்டி எல்லோருக்கும் அருள்புரிந்து ஆனி மாதம் பௌர்ணமி கூடிய மூலநட்சத்திரத்தன்று கந்தவேளின் கழலடியிற் கலந்து பேரின்பப் பெரும் பேறெய்தினார்.

அருணகிரிநாதர், முருகப்பெருமானிடமிருந்து பிரணவ உபதேசத்தைப் பெற்றது முதல் இறைகழலடியெய்தியது வரை முருகானுபவங்களால் நிரம்பித் திகழ்ந்தார். இவ்வாறு முருகப்பெருமானிடமிருந்து பிரணவ உபதேசத்தைப் பெற்றவர்களாக முழுமுதற் கடவுளான சிவபிரானும், முனிவர் பெருமான் அகத்தியனாரும் அருணகிரிநாத சுவாமிகளும் போற்றப்படுகின்றார்கள்.

## தொகுப்பாக்கத்திற்கான குறிப்புரை

சாமானிய மானிடப் பிறவியாகப் பிறந்த அருணகிரியார் இவ்வுலக ஆசாபாசங்களால் அல்லற்பட்டு இத்தகைய நிலைவரை சென்று முத்திப்பேறெய்தியமைக்கு பிரதான சான்றாக அமைந்தது யாதெனில் அவர் முருகன் ஒருவனையே நியமம் தவறாது பக்தி செய்து அவனருளாலே அவன் புகழைப் பாடி வந்தமையேயாகும். இவ்வகையின்பால் அருணகிரிநாத சுவாமிகளைத் தமது குருவாகக் கொண்டு முருகப்பெருமானை பாடியும், தேடியும் உய்தி பெற்றவர்களாக தாயுமான சுவாமிகள், அந்தகக்கவிவீரராகவ முதலியார், வரகவிமார்க்க சகாயதேவர், சுப்ரமண்யமுனிவர், சிதம்பரமுனிவர், கந்தப்பதேசிகர், இராமலிங்கர், பாம்பனடிகள், ஞானவரோதயர், குணசீலர், முருகதாசசுவாமிகள், குமரகுருபரர், பகழிக் கூத்தர், ஞானவரோதயர், கவிராஜப்பிள்ளை, கிருபானந்தவாரியார் போன்ற மெய்ஞானிகளுடன் இன்னும் பலர் உள்ளனர்.

இவ்வான்றோர் வரிசையில் அருணகிரிநாதரால் இயற்றப்பெற்றனவற்றையெல்லாம் முருகப்பெருமானை கண்டின்புற வல்லனவாகக்கொண்டு காலமெல்லாம் போற்றிப் பரவி வந்துற்றதுடன் இவற்றுக்கெல்லாம் திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் விளக்க உரை களும் செய்து தந்துள்ளார்கள். அவ்விதம் உரை செய்தனவற்றை எல்லாம் இத் தொடரின்பால் உள்ளடக்கவியலாததாயினும் அவ்விதம் சுவாமிகள் உரை செய்த திருப்புகழ்களில் சிலவற்றை யேனும் தொகுத்துத் தருவதற்கு முனைகிறேன். இதற்கு முன்னதாக வாரியார் சுவாமிகளது வாழ்வியற் குறிப்புக்களை அடுத்த தொடரில் பகிர்ந்து கொள்வோம். (தொடரும்...

---

*மனிதப் பிறவியின் நோக்கம் சேவை செய்வதற்கும், மற்றவருக்கு உதவி செய்வதற்கும் மட்டுமே. சிலருக்கு பலவீனமான உடல்கள், சிலருக்கு நோயுற்ற உடல்கள். சிலர் மட்டுமே ஆரோக்கியமாக இருக்கின்றனர். ஆரோக்கியமாக இருப்பவர் அடுத்தவருக்கு உதவி செய்யவேண்டும். சேவை செய்யும்பொழுது அதன் நோக்கம் நல்லதாக இருக்க வேண்டும்.*

***சிறந்த புத்தகங்களே மிகச் சிறந்த நண்பர்கள்.***

# சரித்திரம் போற்றும் சாதனைத் தமிழன்

– திரு காரை எம்.பி. அருளானந்தன் அவர்கள் –

சந்நிதியான் ஆச்சிரம காவலருக்கு
சாதனைத் தமிழனென்ற விருது சேர்த்தோம்
ஏன் இவருக்கிந்த விருததனை
டான் தொலைக்காட்சி குழுமம் வழங்கியது தெரியுமா?
தேசத்தில் வறுமையில் வாடும் மனிதர்க்கு
தேவையறிந்து இரங்கிடும் மோகனமல்லவா!
வாசம் கமழும் ஈகையாளனை
வடபுலத்தில் சாதனைத் தமிழனாக்கினோம்
வேசம் போடும் உலகத்தில் - பசி
விடிவுக்குழைக்கும் அன்னதானப் பிரபுவல்லவா!
கோரும் உரிமை எதையும் நாளும்
கொடுக்க வல்ல சந்நிதி ஆச்சிரம தூதனல்லவா
ஆரும் தடுத்து ஆட்கொள்ள முடியாத
ஆற்றங்கரையானின் அருள்பெற்ற நாயகனே!
சாதனைத் தமிழனென்ற நாம் தமிழர்
சரித்திரத்தில் பதிவானது ஐயா வாழி!

---

# ஞானச்சுடர் ஒளி ஞாலமெல்லாம் பரவட்டும்

பசிப்போற்கு உணவு ரசிப்போற்குக் கலைகள்
வசிப்போற்கு உதவி வழங்குதலே தானம்
தானத்தின் சிறப்பதனை படம்போட்டுக் காட்டுகின்ற
ஞாலத்தின் திறவுகோலே ஞானச்சுடர் வாழி!

பக்திக்குப் பாட்டு முத்திக்குப் பூசை
வக்கற்றோர்க்கு வாழ்க்கை வழங்குவதே தர்மம்
தர்மத்தின் சிறப்பதனை பறைசாற்றிக் காட்டுகின்ற
தக்கதோர் சஞ்சிகையே ஞானச்சுடர் வாழி!

இறைவனை உணர்த்துதல் மறைகளைப் புகட்டுதல்
நிறைவான நெறிமுறை ஓம்புதலே அறம்
அறத்தின் திறமதனை அளந்தளந்து காட்டுகின்ற
சிறப்புறு அளவுகோலே ஞானச்சுடர் வாழி!

இல்லாற்குக் கொடுப்பது இயலாற்கு உதவுவது
செல்வத்தைப் பகிர்ந்தளித்தல் என்பதே கொடை
கொடை கொடுக்கும் வழிமுறையை தெளிவோடு காட்டுகின்ற
நடைமுறைச் சஞ்சிகையே ஞானச்சுடர் வாழி!

தேவையான செய்தல் தியாகங்கள் புரிதல்
தனக்கென வாழாது பிறர்க்காக வாழ்தல் இவைகளே சேவை
சேவையில் பூத்ததொரு வாசனையைச் சிந்துகின்ற
நேசத்தின் குரலதுவே ஞானச்சுடர் வாழி!

– ஆசுகவி –

தோல்வியை நேசி. வெற்றியின் விளிம்பு உன் விழியருகே தெரியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2024ஆம் ஆண்டு வாசகர் போட்டிக்கான விடைகள்

| | மாதம் | பக்கம் |
|---|---|---|
| 01. மன அடக்கம் | மாசி | 14 |
| 02. சத்தியம், தர்மம், அமைதி, அகிம்சை | பங்குனி | 05 |
| 03. தென்புலத்தார், தெய்வம், விருந்தினர், சுற்றத்தினர், நாம் | ஐப்பசி | 24 |
| 04. மெய்ப்பொருள் | தை | 16 |
| 05. வாழ்க்கையின் சகல பகுதியையும் சுட்டிக் காட்டுவது | சித்திரை | 01 |
| 06. அகத்தியர், சமரசநிலை ஞானம் | பங்குனி | 28 |
| 07. ஏகம்பவாணர் | தை | 61 |
| 08. நம்மால் அடுத்தவர் மகிழ்ச்சி அடைவதில் | வைகாசி | 57 |
| 09. காரைக்காலம்மையார், வியாக்கிரகபாதர், பதஞ்சலி, அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் | சித்திரை | 02 |
| 10. திருவண்ணாமலை | தை | 37 |
| 11. சந்நிதியான் ஆச்சிரமம் | மாசி | 07 |
| 12. அருவத்திருமேனி | ஆனி | 05 |
| 13. மதம், விஞ்ஞானம் | ஆடி | 10 |
| 14. சாந்தி, சமாதானம், அமைதி | ஆனி | 18 |
| 15. உயர்வு தாழ்வுகள் இல்லாமல் பிற மனிதர்கள்மீது அன்பு பாராட்டும் உயரிய பண்பு | ஆவணி | 43 |
| 16. தன் கருத்தில் கண்ணும் கருத்துமாய் இருப்பவன் | வைகாசி | 54 |
| 17. பொறாமை | ஆடி | 26 |
| 18. அரசமரம், பிரமன், விஸ்ணு, சிவன் | ஆவணி | 29 |
| 19. மதம் | ஆடி | 12 |
| 20. விசுவலிங்கம் ஆசிரியர் | வைகாசி | 43 |
| 21. பெற்ற தாய் | மாசி | 26 |
| 22. பெற்ற தாய் | ஐப்பசி | 15 |
| 23. இறைவன் | புரட்டாதி | 13 |
| 24. அறம் பாலிக்கும் ஞான மோகனம் | புரட்டாதி | 40 |
| 25. கடவுளோடு ஐக்கியப்பட வேண்டும் | புரட்டாதி | 10 |

எதையும் ஏற்றுக்கொள்ளும்போது மனம் இலகுவாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**1ஆம் பரிசு** — **ஆ. ருக்மணிதேவி**
சிவன் வீதி,
ஆவரங்கால்

**2ஆம் பரிசு** — **திருமதி ம. ஸ்ரீஸ்கந்தராசா**
குச்சம் ஒழுங்கை,
வல்வெட்டித்துறை.

**3ஆம் பரிசு** — **யுவராஜ் பிரேமினி**
முடக்கந்தோட்டம்,
அல்வாய்.

## ஆறுதல் பரிசு பெறுவோர் விபரம்

**1. திருமதி நாகேஸ்வரி சண்முகரத்தினம்**
58/3, புகையிரத நிலைய வீதி,
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்

**2. ஜெகநாதன் பேரானந்தம்**
79/38, கிளானை வீதி,
02ஆம் இடது ஒழுங்கை,
கொல்லன்கலட்டி, தெல்லிப்பளை.

**3. கை. அங்கயற்கண்ணி**
425, நாவலர் வீதி
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

**4. செந்தில்நாதன் வசந்தாதேவி**
21/2, இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு.

**5. M. அருந்ததி**
414/7, கோயில் வீதி,
நல்லூர்.

**6. K. தீபிகா**
வயாவிளான் தெற்கு,
திடற்புலம்.

**7. திருமதி ஸ்ரீதரன் சத்தியபாமா**
"இராஜேஸ்வரி அன்புச்சோலை"
125, செம்பருத்தி இல்லம்,
அச்செழு.

**8. திருமதி ஏகாம்பரம் ஜெயராணி**
இல.02, புறாடி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

**9. சி. கிருபாலோசனி**
ஏழாலை மேற்கு,
சுன்னாகம்.

**10. பாலசுப்பிரமணியம் நிர்மலாதேவி**
280, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

**வாசகர் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்கள் மாசிமாத ஞானச்சுடர் வெளியீட்டின்போது (28.02.2025) வழங்கப்படும்.**

*எட்டி வைத்து முயன்றால் எல்லாமே எட்டிவிடும் தூரம்தான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாசி மாத வாராந்த நிகழ்வுகள்

**07.02.2025 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு:- "சைவத் தமிழர் கலாசாரம்"

வழங்குபவர் :- மதுரகவி காரை எம்.பி. அருளானந்தன் அவர்கள்

[ஆசிரியர்]

---

**14.02.2025 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

"இன்னிசை"

(பக்கவாத்திய சகிதம்)

---

**21.02.2025 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு:- "மகாபாரதம்" (தொடர்)

வழங்குபவர் :- திரு இரா. செல்வவடிவேல் அவர்கள்

[ஆசிரியர்]

---

**28.02.2025 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

# ஞானச்சுடர் மாசி மாத வெளியீடு

வெளியீட்டுரை :- திருமதி சிந்துரா கலியுகவரதன் அவர்கள்

[சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர்]

326ஆவது மலர்

மதிப்பீட்டுரை :- திருமதி புனிதவதி சண்முகலிங்கம் அவர்கள்

[இளை. ஆசிரியர்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org